Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
யாழ்ப்பாணம், விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள்
இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்
INTERNET
மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு
'திருமுருகன் கொம் நெற்'
இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310
(சி-1771)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 09 (04.12.2003) வியாழக்கிழமை இதழ்:65

# ரஷ்யப் பாதுகாப்பு அதிகாரிகள் குடாநாட்டுக்கு இரகசிய விஜயம்!

## ராணுவநிலைகளை அவதானிக்க மூன்று நாட்கள் தங்கியிருந்தனர்!

(கொழும்பு)

**கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்தில் பணியாற்றும் இரண்டு முக்கிய பாதுகாப்பு அதிகாரிகள்- கடந்தவாரம் இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்து - இங்குள்ள இராணுவ நிலைகள் மற்றும் தற்போதைய நிலைவரங்கள் குறித்து மதிப்பீடு செய்துள்ளதாகத் தெரியவருகின்றது.**

இது குறித்து மேலும் தெரியவருவதாவது - கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதரகத்தைச் சேர்ந்த இராணுவ, கடற்படை, விமானப்படை என்பவற்றிற்கான பாதுகாப்பு இணைப்பதிகாரி கேணல் பி.பொபேவ் மற்றும் அவரது செயலாளரான ரஷ்ய விமானப்படையைச் சேர்ந்த கப்டன் கே.யுகோர்னிக் ஆகியோர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

விமானப்படையின் விமானம் மூலமாக, பலாலி விமானத் தளத்துக்கு வந்த ரஷ்யப் பாதுகாப்பு அதிகாரிகள், கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை - மூன்று நாட்கள் இங்கு தங்கியிருந்தனர்.

குடாநாட்டின் தள நிலைவரம், பாதுகாப்பு நிலைமை, அபிவிருத்தி மற்றும் பொதுமக்களின் வாழ்க்கை முறை என்பவற்றை ஆராயவே இவர்கள் இங்கு வந்ததாக கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இந்த இரண்டு ரஷ்யப்பாதுகாப்பு அதிகாரிகளும்- 51 ஆவது, 52 ஆவது,

(12 ஆம் பக்கம் பார்க்க)





யாழ். குடாநாட்டுக்கு கடந்தவாரம் விஜயம் செய்த ரஷ்ய பாதுகாப்பு அதிகாரியை முதற் படத்திலும், ரஷ்ய பாதுகாப்பு அதிகாரியை மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா சந்தித்து பேச்சுநடத்துவதை அடுத்த படத்திலும் காணலாம்.

## திருமலை அசம்பாவிதங்களைக் கட்டுப்படுத்த முப்படைத் தளபதிகளுக்கு சந்திரிகா உத்தரவு!

(கொழும்பு)

திருகோணமலையில் இடம்பெற்று வரும் அசம்பாவிதங்களைத்தடுக்க, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு முப்படைத் தளபதிகளுக்கும், பொலிஸ்மா அதிபருக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியால் பாதுகாப்பு அமைச்சு கையேற்கப்பட்ட பின்னர், திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுஅமைப்புக்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்தே ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் ஜனாதிபதிக்கு பாரிய தலையிடியை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதனால் திருகோணமலை மாவட்டத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு பொலிஸாருக்கும், படையினருக்கும் ஜனாதிபதி பணித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

### வடமராட்சி - கரணவாய் பகுதியில்

## தனிப்பட்ட ரீதியில் ஏற்பட்ட மோதல் துப்பாக்கிப் பிரயோகத்தில் முடிந்தது

வடமராட்சி கரணவாய் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் தனிப்பட்ட ரீதியில் ஏற்பட்ட மோதல் துப்பாக்கிப் பிரயோகத்திலும், கைக்குண்டு வீச்சிலும் முடிந்துள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, காதல் பிரச்சனை தொடர்பாக அப்பகுதி வீடொன்றிற்கு நியாயம் கேட்டு ஒரு குழுவினர், நேற்று முன்தினம் இரவு சென்றனர். அங்கு இருதரப்பிற்குமிடையே இடம்பெற்ற வாக்குவாதங்கள் முற்றி கைகலப்பில் முடிந்தது. அவ்வேளையிலேயே துப்பாக்கிப் பிரயோகமும், கைக்குண்டுவீச்சும் இடம்பெற்றதாக அப்பகுதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## கின்னியா நிலைமை தொடர்பாக புலிகள்-படையினர் சந்தித்து பேச்சு!

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியாப் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக நேற்று திருகோணமலை கட்டைப்பறிச்சானில் விடுதலைப் புலிகளுக்கும், படைத்தரப்புக்கும் இடையே சந்திப்பொன்று நடைபெற்றது.

திருகோணமலை- மூதூர் பிரதேசத்தின் கட்டைப்பறிச்சான் பகுதியிலுள்ள சூனியப் பிரதேசத்தில் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பு சுமார் ஒருமணி நேரம் நீடித்தது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பதுமன், ம்ாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் மற்றும் தம்பலகாமம் கோட்டத்தளபதி மது, உப்பாறு பிரதேசத்தளபதி விமல் ஆகியோரும், படைத்தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், மேஜர் ஷகீர், மற்றும் மூதூர் பிரதேச இராணுவ அதிகாரிகள் நால்வரும் கலந்துகொண்டனர்.

இந்தச்சந்திப்பினை முடித்துக் கருத்து வெளியிட்ட மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், தற்போது கிண்ணியாப் பிரதேசத்தில் தமிழ் - முஸ்லீம் மக்களுக்கிடையேயான (12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதி இந்தியா கூர்ந்து அவதானிக்கிறதாம்!

### வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹா கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையில் அண்மைக்காலமாக முஸ்லிம் சமூகத்துக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து இந்தியா கூர்ந்து அவதானித்து வருவதாக, இந்திய வெளியுறத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹா தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சருமான ரவூப் ஹக்கீம், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹாவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். திருகோணமலையில் தற்போது இடம் பெற்றுவரும் சம்பவங்கள் குறித்தும் இந்தியாகவனத்தில் எடுத்துவந்துள்ளதாக ஜஸ்வந்சிங்ஹா மேலும் தெரிவித்தார்.

### விண்ணாணம் விநாசியர்



நீதியைப் போதிக்கவும் தகுதி வேண்டாமா?

## பிரிட்டிஷ் பாதுகாப்பு குழு விரைவில் யாழ். வரும்!

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த குழுவொன்று விரைவில் யாழ்வரவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்தவர்களும், பிரிட்டிஷ் கவுன்சிலைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகளுமே இங்குவரவுள்ளனர்.

இவர்கள் யாழ்மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் புனரமைப்பு பணிகளுக்கான புதிய திட்டங்கள் பற்றியும் ஆராயவுள்ளார்கள்.

யாழ்.அரச அதிபர், யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்து உரையாடவுள்ளனர். இவ்வாறானதொரு பாதுகாப்புக் குழு முன்னரும் ஒருமுறை இங்கு வந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (தீ)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1845)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## 2004 ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கு பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 22.12.2003 ஆம் திகதிவரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### பொருட்கள்

01. காகிதாதிகள், எழுது பொருட்கள்.
02. அலுவலக உபகரணங்கள்.
03. மேல்நாட்டு மருந்துவகைகள், வைத்திய உபகரணங்கள்
04. சித்த மருத்துவ மருந்துகள்.
05. கோலவுடைத்துணிகள், ஜன்னல் துணிகள், ஏனைய துணி வகைகள்.
06. பாதணிகள், மழைக்கவசம், மற்றும் தோற்பொருட்கள்
07. கட்டடப் பொருட்கள் (சீமேந்து, கூரைத்தகடு, ஓடுகள் முதலியன.)
08. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன.
09. கற்கள், மணல்கள்.
10. நீர்வழங்கு பொருட்கள், பி.வி.சி. குழாய்கள் முதலியன.
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணைஉறுப்புக்கள்.
12. மின்சார இயந்திப் பொருட்கள், மின்கருவிகள்.
13. விறகு, தேங்காய்மட்டை, கிடுகுகள்.
14. எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்.
15. இரும்புப்பொருட்கள்.
16. பனைமரங்கள், சலாகைகள்.
17. நூலகங்களுக்குரிய நூல்கள்.
18. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர், ரியூப் முதலியன.
19. தீராந்திகள், நீப்பைகள், பலகைகள்.
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்கடகம், கால்துடைப்பம், இளைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன.
21. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமி நாசினிகளும் மருந்துகளும்
22. கணினிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோப் பிரதி இயந்திரம்.

(கனன், சாப் வகைகளுக்கான உதிரிப்பாகங்கள்) வழங்கல்.

### சேவைகள்

01. அச்சிடுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்
03. மோட்டோர் வாகனங்கள் திருத்தம்.
04. ரியூப் ஒட்டுதல் (வாகனங்கள்)
05. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்.
06. ஏற்றி இறக்கல் வேலைகளுக்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல், (சுத்திகரிப்பு வேலைப்பகுதி ஏற்றி இறக்கல் வேலைக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்.)
07. கோலவுடை தைத்தல்.
08. மின்மோட்டர்கள், மின்விசிறிகள் ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்.
09. ஏற்றி இறக்கல் தொடர்பாக மாட்டு வண்டியை சேவைக்கு அமர்த்தல்.
10. மின்கலங்களுக்கு மீள மின்வலுவூட்டல்.
11. றப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்.
12. வாகனங்கள் சேவிஸ் செய்தல்
13. கணினி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம் திருத்தம், சேவிஸ் செய்தல்.

கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் "வழங்கல்கள், சேவைகள் 2004" எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகலவிண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கவேண்டும்.

வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம். என முகவரி இடப்படல் வேண்டும்,

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை யாழ். மாநகரசபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக (ரூபா 165/- உடன் மேலதிகமாக வற்வரி 20 % ரூபா 33 /- ) ரூபா 198/- பெறுமதியான காசுக்கட்டளை/தபால் கட்டளையை "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்." என்ற பெயருக்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பிவைக்கவேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக் கிளையில் நேரடியாக வேலை நாட்களில் செலுத்தமுடியும்.

கூறுவிலைகள், பதிவு செய்யப்பட்டவர்களிடம் இருந்து கோரப்படும்.

கோரப்படும் பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத்தவறும் அல்லதுஉரிய நேத்திற்கு பொருட்கள்/சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/ சேவைகள் வழங்கும் எந்தவொரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.

**இ.இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

திகதி:-01.12.2003 (சி-1854)

# கட்டடத் தொகுதிகளின் சீரின்மையால் முதியவர்களுக்கு பெரும் அசௌகரியம்

கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள மூன்று கட்டடத் தொகுதிகள் சீரின்றிக் காணப்படுவதால், மழை பெய்யும் வேளையில் அங்குள்ள முதியவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1995 ஆம் ஆண்டில் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியிருந்த இந்த முதியோர் இல்லம் மீண்டும் புனரமைக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வந்தது.

எனினும், 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இங்குள்ள பல கட்டடங்கள் பெரும் சேதமடைந்தன.

எனினும், அவற்றில் சில கட்டடங்கள் புனரமைக்கப்பட்டிருந்த போதிலும், மூன்று பிரதான கட்டடத் தொகுதிகள் புனரமைக்கப்படவில்லை.

இங்கு பராமரிக்கப்பட்டு வரும் 196 முதியவர்களுக்கான இடவசதிகள் குறைவாக இருக்கின்றமையால், இவ்வாறு மூன்று கட்டடத் தொகுதிகள் சீரற்றிருக்கின்மையானது, அங்கு தங்கி வாழும் முதியவர்களுக்கு பெரும் அசௌகரியத்தினை ஏற்படுத்தியுள்ளது.

(ப,111)

## சிறு விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

தவசிக்குளம் கொடிகாமத்தைச் சேர்ந்த யோகேஸ்வரன் யோகதீஸ்வரி என்பவரின் விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் யாழ்.நவீன சந்தையில் உள்ள இளவரசி சேலைச் சோலையில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும். (543)

## உளமார்ந்த நன்றிகள்...



**அல்லாரை தெற்கு மீசாலை அருள்மிகு கண்ணகை அம்மன்** ஆலய சுற்றாடலுக்கு மலசல கூடங்கள் அமைப்பதற்கு பொருட்கள் தந்துதவிய இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்களுக்கு ஆலய நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் சார்பாக எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

(542)

ஆலய நிர்வாகிகள்,
பொதுமக்கள்.


**ராஜா** யாழ்ப்பாணம்.

சில தினங்கள் மட்டும்

சிலம்பரசன், ஷர்மி நடித்த

**காதல் அழிவதில்லை**

காட்சிநேரம் :10.30, 2.30, 6.30 (பு.நே)

**2 FAST 2 FURIOUS**

இரவு 9.30 மட்டும் (சி-1847)

**திறைஞ்சனாஸ்** சங்கானை

விஜய், ஜோதிகா நடித்த

**திருமலை**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

**2 FAST 2 FURIOUS**


# கூறுவிலை கோரல்

## இலங்கை மின்சார சபை (வடமாகாணம்)

கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள், வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட தனித்தனியான கூறுவிலைகளை 2003.12.22 ஆந் திகதி காலை 10.00 மணிவரை இலங்கை மின்சாரசபை கூறுவிலைச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பலப்படுத்திய** (Reinforced) **சீமெந்திலான கம்பங்கள் விநியோகித்தல்**

| | | கூறுவிலை இல |
|---|---|---|
| 01. 8.3 மீற்றர் 100 கிலோ | 500 எண்ணிக்கை கிளிநொச்சி மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/54 |
| 02. 8.3 மீற்றர் 100 கிலோ | 500 எண்ணிக்கை முல்லைத்தீவு மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/55 |
| 03. 8.3 மீற்றர் 100 கிலோ | 400 எண்ணிக்கை வேலணை மி.பா.சே.நி | டிஜிஎம்/என்பி/2003/56 |
| 04. 6.0 மீற்றர் 50 கிலோ | 600 எண்ணிக்கை வேலணை மி.பா.சே.நி | டிஜிஎம்/என்பி/2003/57 |
| 05. 6.0 மீற்றர் 50 கிலோ | 600 எண்ணிக்கை கிளிநொச்சி மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/58 |
| 06. 6.0 மீற்றர் 50 கிலோ | 600 எண்ணிக்கை முல்லைத்தீவு மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/59 |

**நடுத்தர, தாழழுத்த** (Medium& Low Voltage) **மின்மார்க்க அமைப்பு வேலைகள்**

| | | |
|---|---|---|
| 07. நடுத்தர, தாழழுத்த மின்மார்க்கம் | கிளிநொச்சி மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/60 |
| 08. நடுத்தர, தாழழுத்த மின்மார்க்கம் | முல்லைத்தீவு மாவட்டம் | டிஜிஎம்/என்பி/2003/61 |

பலப்படுத்தப்படட (Reinforced)/ பிறிஸ்ரெஸ்ற் (Pre - stressed) மின்கம்பங்களை வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள வேலைத்தளங்களுக்கு ஏற்றி இறக்குதல்.

| | | |
|---|---|---|
| 09. அ) 8.3 மீற்றர் 100 கிலோ | பலப்படுத்தப்பட்ட மின்கம்பம் | டிஜிஎம்/என்பி/2003/62 |
| ஆ) 11 மீற்றர் 350 கிலோ | பிறிஸ்ரெஸ்ற் மின்கம்பம் | |
| இ) 13 மீற்றர் 850 கிலோ | பிறிஸ்ரெஸ்ற் மின்கம்பம் | |
| 10. அ) 8.3 மீற்றர் 100 கிலோ | பலப்படுத்தப்பட்ட மின்கம்பம் | டிஜிஎம்/என்பி/2003/63 |
| ஆ) 11 மீற்றர் 350 கிலோ | பிறிஸ்ரெஸ்ற் மின்கம்பம் | |
| இ) 13 மீற்றர் 850 கிலோ | பிறிஸ்ரெஸ்ற் மின்கம்பம் | |

கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரத்தின் பின் உடனடியாக பிரதிப் பொதுமுகாமையாளர், இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம் அலுவலகத்திலும், மின் பொறியியலாளர், இலங்கை மின்சாரசபை, வவுனியா அலுவலகத்திலும் கூறுவிலைகள் திறக்கப்படும்.

கூறுவிலையாளர்கள், கூறுவிலைப்பத்திரங்களை ரூபா.500/= காசாகவோ அல்லது பொது முகாமையாளர், இலங்கை மின்சாரசபை என்ற பெயரில் பெறப்பட்ட வங்கிக்கட்டளையையோ சமர்ப்பித்து கீழ்க்குறிப்பிடப்படும் அலுவலகங்களில் 2003.12.19 ஆந் திகதிவரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 3.00 மணிவரை சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். கூறுவிலையாளர்கள் இலங்கை மின்சாரசபையிலிருந்து பெறப்பட்ட கூறுவிலைப் பத்திரங்களை இணைப்பிரதியுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021-222 2496, 021-222 3233
தொலைநகல் இல. 021-222 2497

மின் பொறியியலாளர்,
கிளிநொச்சிப் பகுதி,
இலங்கை மின்சார சபை,
பூங்கா வீதி, வவுனியா.
024-22 22285
024-22 23597

பூர்த்திசெய்யப்பட்ட கூறுவிலைப்பத்திரங்களை கடித உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில் வேலைவிபரம், கூறுவிலை இலக்கம் என்பன குறிப்பிட்டு மேலே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு 2003.12.22 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**தலைவர்,**
மாகாண கேள்விச் சபை. வடமாகாணம்.
இலங்கை மின்சார சபை.
536/1, காங்கேசன்துறை விதி,
யாழ்ப்பாணம்.

(சி-1861)

தலைவர்,
மாகாண கேள்விச் சபை,
வடமாகாணம்.

# மூன்றுஅமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதும் நன்மையாம்

## மிலிந்த மொறகொட கூறுகிறார்

ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்றுக் கொண்ட நடவடிக்கையினால், சில நன்மைகளும் விளைந்திருப்பதாகப் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை காரணமாக, இரண்டு பிரதான கட்சிகளும் தம்மிடையே ஒரு இணக்கப்பாட்டுடன் செயற்படும் நிலைமை தோன்றியிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் மிலிந்த மொறகொட இவ்வாறு தனது கருத்தை வெளியிட்டார்.

தற்போது தோன்றியிருக்கும் இந்த அரசியல் சர்ச்சையினால் ஏற்பட்டுள்ள பல வேண்டத்தகாத விளைவுகள் தற்காலிகமானவை எனக் குறிப்பிட்ட அவர், ஆனாலும், நீண்டகால நோக்கில் இரு பிரதான கட்சிகளும் தம்மிடையே ஒரு பொது உடன்பாட்டுடன் செயற்படுவதற்கான அரியவாய்ப்பை இது ஏற்படுத்தித் தந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அங்கு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிட்னி ஜயரட்ன, ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர், நாடாளுமன்றத்தில் பாதுகாப்புத் தொடர்பான விபரங்களுக்குப் பதிலளிக்க எவரும் இல்லாதநிலைமை காணப்படுவதாகவும், இதனால், திருகோணமலையில் தற்போது தோன்றியிருக்கும் பதற்றநிலை தொடர்பான விவாதத்துக்கு நாடாளுமன்றத்தில் இடமில்லாமல் போயிருப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

# ஏழுமாத காலப்பகுதியில் மட்டும் சுற்றுலா வருமானம் 28 பில்லியன்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் மட்டும், சுற்றுலாத்துறையின்மூலம் 28 பில்லியன் ரூபா வருமானமாகப் பெறப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே இது குறித்து தகவல் வெளியிடுகையில் -

கடந்த வருடம் இதே காலப்பகுதியில் - சுற்றுலாத்துறை பெற்றவருமானத்தைவிட, இந்த வருடம் ஒரு பில்லியன் ரூபா கூடுதல் வருமானத்தைப் பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதலான வசதிகள் வழங்கப்படவுள்ளதாகவும், வெளிநாட்டிலிருந்து விமானப் போக்குவரத்துக்கள் அதிகரிக்கப்படவிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் - திலங்க சுமதிபால தன்னைக் கைதுசெய்யுமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைமீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை அவர் மேற்கொண்ட இந்த வழக்குத் தாக்கலில், தான் செய்யாத தவறிற்கு தண்டனை வழங்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

இவரது மனுவில் பிரதிவாதிகளாக- சொலிஸிட்ட ஜெனரல் மற்றும் சட்டமா அதிபர், புலனாய்வுப் பணிப்பாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

திலங்க சுமதிபால மீது - பிரபல பாதாள உலகக்கோஷ்டியைச் சேர்ந்த தம்மிக்க அமரதுங்கவுக்கு, கடந்த உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளைப் பார்வையிடுவதற்கான நுழைவுச் சீட்டுக்களைப்பெற்றுக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து, சட்டமா அதிபரினால் அவரைக் கைதுசெய்யவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனை எதிர்த்தே அவர் இந்த வழக்குத்தாக்கலை மேற்கொண்டார். (01)

# தரம் 10 மாணவர்களுக்கு புதிய பாடங்கள் அறிமுகம்

அடுத்த வருடத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில், புதிய பாடங்களை பாடத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ள தேசிய கல்வி நிறுவகம் தீர்மானித்துள்ளது.

மாணவர்களுக்கு தொழில்நுட்ப அறிவு மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிக்கக்கூடிய பாடங்களே பாடசாலை பாடத்திட்டங்களில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தில் ஆண்டு 10 மாணவர்களே இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். 35 தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இந்தப் பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப் படவுள்ளன.

இந்தப் பாடங்களைக் கற்பிப்பதற்கென 70 ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி குணவர்த்தன தெரிவித்தார்.

# சமாதானத்தைக் குழப்பவேண்டாம்: மன்னாரில் பரவலாக சுவரொட்டிகள்

மன்னாரின் பொது இடங்களில்- அரசியல் தலைவர்கள், பொது மக்களை சமாதானத்திற்கு எதிராக செயற்பட வேண்டாமென, சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டு காணப்படுகின்றன.

நேற்றுமுன்தினம் மன்னாரின் தேவாலயங்கள், சந்தைகள், பாடசாலைகள் மற்றும் பொதுஇடங்களில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளிலேயே, இவ்வாறு தெரிவீக்கப்பட்டுள்ளது.

அரசியல் தலைவர்களே, சமாதானத்தைக் குழப்பவேண்டாம். பொது மக்களே, சமாதான முன்னெடுப்பினைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் எனவும் அதில் கேட்கப்பட்டுள்ளது.

இந்த சுவரொட்டிகளை தேசிய சமாதானப் பேரவையும், சமாதானத்தினை விரும்பும் மக்களும் இணைந்து வெளியிட்டதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்படுள்ளது. (201)

# பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது!

## அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு

நீதியானதும், நிரந்தரமானதுமான ஒரு தீர்வை ஏற்படுத்தும் வகையில், விடுதலைப் புலிகளுடன் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து, அரசாங்கம் பரிசீலித்து வருவதாக அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு - தாஜ் சமுத்திரா உல்லாசவிடுதியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

சமாதான முயற்சிகளின் முன்னேற்றம், தென்பகுதி அரசியல் உறுதித் தன்மையிலேயே தங்கியுள்ளதாக மாவீரர்தின உரையில் தமிழீழ தேசியத் தலைவர் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிப் பேசிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கான தமது ஆர்வத்தை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள நிலையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து ஆலோசித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

நிலையான சமாதானத்தை நோக்கிய முயற்சிகள் இனிமேல் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால், யாரோ ஒருவர் மட்டுமே சமாதான முயற்சிகளுக்குப் பொறுப்பாக இருக்கமுடியும் என்றும் பேராசிரியர் பீரிஸ் அங்கு மேலும் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்க தலைவர்களுடன் அரசு - புலிகள் சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில், தென்னாபிரிக்காவின் அனுபவங்களை அறிந்து கொள்ளும் முகமாக - இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் தென்னாபிரிக்கத் தலைவர்களுடன் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர்.

இலங்கையின வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் நிக்கோசா சானா டிலாமினியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் தலைமையிலான குழுவினர் - ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்புக்கள் குறித்து, செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த ஆபிரிக்க காங்கிரஸின் தலைவர் - ஸ்டீன் ஸ்பீட், தென்னாபிரிக்காவின் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்பட்ட அடிப்படையை இலங்கை இனப்பிரச்சினைக்கு பயன்படுத்திக்கொள்ள முடியுமா என்பது குறித்து இரு தரப்பினரும் ஆலோசனை நடத்தியதாகத் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்தும், தென்னாபிரிக்க அரசுடன் இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், தென்னாபிரிக்க மனிதவுரிமைகள் மையத்தின் பிரதிநிதிகளையும், தேர்தல் ஆணையாளரையும் விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழு இன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் ஸ்டீன் ஸ்பீட் தெரிவித்தார்.

# ஜனாதிபதிக்கு ஒதுக்கிய நிதியை நாடாளுமன்றம் அங்கீகரித்தது

2004 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில், ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நாடாளுமன்றம் எவ்வித எதிர்ப்புமின்றி அங்கீகரித்துள்ளது.

ஜனாதிபதிக்கும், பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் இடையே அண்மைக் காலமாக நிலவிவரும் சர்ச்சை காரணமாக, இந்தமுறை வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கு ஒதுக்கப்படும் நிதி தொடர்பாக சிக்கல் தோன்றலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் எதுவித சிக்கல்களுமின்றி ஜனாதிபதிக்குரிய நிதி ஒதுக்கப்பட்டமை, இரு தரப்புக்கும் இடையேயான ஒரு இணக்கச் சூழலைப் புலப்படுத்துவதாக அவதானிகள்

# மன்னார் மீனவரால் பிடிக்கப்பட்ட 32 தமிழக மீனவர்கள் விடுவிப்பு!

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது, மன்னார் மீனவர்களால் பிடிக்கப்பட்ட 32 தமிழக மீனவர்களும் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை பிடிக்கப்பட்ட இந்த மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக, விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் பேச்சு நடத்தினர்.

இதனையடுத்து, 32 தமிழக மீனவர்களையும், அவர்களது 7 மீன்பிடிப் படகுகளையும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் புலிகள் ஒப்படைத்ததாகக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் - அக்னஸ் பிறகர் டோட்ரயர் தெரிவித்தார்.

இதேவேளை - ராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கச்சதீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது, தமிழக மீனவர்கள்மீது தாக்குதல் நடத்திய கடற்படையினர், 13 படகுகளையும், படகோட்டிகளையும் பிடித்துச் சென்றதாக இராமேஸ்வர மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் படகுகளிலிருந்த ஏனைய மீனவர்கள் தாக்கப்பட்டு, துரத்தப் பட்டதாகவும், இதனையடுத்து இராமேஸ்வரம் பகுதியில் பதட்டம் நிலவுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.




ஜேர்மனியில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பருதி உரையாற்றுவதையும், நிகழ்வில் ஒரு காட்சியையும், இந்நிகழ்வில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



அண்மையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவால் நடாத்தப்பட்ட, சிறுவர் முதியோர் தின விழாவில் - பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு, மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். (122)

# கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் விசேடகழிவில் பொருட்கள் விற்பனை!

## யாழ்.கிளை வட்டாரங்களில் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் மூடப்படவுள்ளதால், கையிருப்பிலுள்ள பொருட்களை விசேட கழிவு விலை யில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக, யாழ்.மாவட்ட கட்டடப் பொருள் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்கம் - இலங்கைக் கட்டடப் பொருள் கூட்டுத் தாபத்தினை மூடுவதற்குத் தீர் மானித்துள்ளதனை அடுத்து, சகல மாவட்டங்களிலுமுள்ள தமது கூட்டுத்தாபனக் கிளைகளுக்கு கையிருப்பிலுள்ள கட்டடப் பொருட்களைக் கூடுதலான கழிவு விலைக்கு வழங்குமாறு பணித்துள்ளது.

இதனை அடுத்தே, யாழ்.மாவட்ட கட்டடப் பொருள் கூட்டுத்தாபனக் கிளையும் தமது கையிருப்பிலுள்ள பொருட்களை விற்பனை செய்யத் தொடங்கியுள்ளது.

இதுவரை காலமும் யாழ்.ஸ்ரான்லி வீதிப்பகுதியில் இயங்கிவந்த இந்த கூட்டுத்தாபனம், தற்போது மனோகராத் தியேட்டரில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வீடு கட்டுவதற்குத் தேவையான சில பொருட்கள் இங்கு விற்பனைக்கு இருப்பதாகவும், அவை இன்று முதல் விற்கப்படும் எனவும் மேலும் அந்த வட்டாரங்களினால் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டுத்தாபனத்தினை மூடுவதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை குறித்து, அங்கு பணிபுரிவோர் அதிருப்தி தெரிவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# வடக்கு-கிழக்கு வைத்தியசாலைகளுக்கு 25 அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படும்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இயங்கும் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு, 25 அம்புலன்ஸ் வண்டிகளை வழங்குவதற்குச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்தகால யுத்தநடவடிக்கையின்போது, வடக்கு-கிழக்கில் உள்ள வைத்தியசாலைகளுக்கு - அவசர நோயாளிகளை சிகிச்சைக்காக, ஏற்றிச்செல்வதற்கு அம்புலன்ஸ் வண்டிகளின்றி, வைத்தியசாலை நிர்வாகத்தினர் பெரும் நெருககடிகளை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்த நிலையில், கடந்த வருடம் யாழ்ப்பாணம் வந்திருந்த சுகாதார அமைச்சிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டது. இதனையடுத்து சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்தே, இந்த அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கிலுள்ள வைத்தியசாலைகளுக்கு இரு அம்புலன்ஸ் வண்டிகளும், கிழக்கிலுள்ள வைத்தியசாலைகளுக்கு 23 அம்புலன்ஸ் வண்டிகளும் வழங்கப்படவிருக்கின்றன. இந்த அம்புலன்ஸ் வண்டிகளை எதிர்வரும் நான்காம் திகதி கொழும்பு மாநகரசபை மைதானத்தில் வைத்து, மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரியிடம் வழங்கப்படவுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு, நூறு அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்தார்.

### நீர்த்தாங்கி அமைக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

கடந்த பதின்மூன்று வருடங்களாக இயங்காதிருந்து, மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள - ஏழாலை வடக்கு அமெரிக்கன்மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, யுனிசெப் நிறுவனம் 13 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர்த் தாங்கியை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது. (101)

# பொலிஸாரை மோட்டார் சைக்கிளால் மோதிய இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரை மோட்டார் சைக்கிளினால் மோதிக் காயப்படுத்தியதாக, இளைஞர்கள் இருவரை நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். திருநெல்வேலியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்னால் கடமையிலிருந்த பொலிஸார் ஒருவரையே, இவர்கள் மோட்டார் சைக்கிளால் மோதிக் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கருணாநாயக்க (வயது 42) எனும் பொலிஸ் கொன்ஸ்டபிள் - காலில் படுகாயமுற்று, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களை - பொலிஸார் தடுத்து நிறுத்த முற்பட்டவேளை, அவர்கள் அதனை கவனத்திற் கொள்ளாது வேகமாக வந்தமையால், பொலிஸார்மீது மோதநேரிட்டது. இதன்போது, இளைஞர்கள் இருவராலும் எடுத்து வரப்பட்ட விடியோ டெக் - வீதியில் வீழ்ந்துள்ளது.

அதனையும் எடுக்காது இளைஞர்கள் இருவரும் மோட்டார்சைக்கிளில் வேகமாகத் தப்பிச்சென்றுள்ளனர். மேட்டார் சைக்கிளின் இலக்கத்தைக் குறித்து வைத்த பொலிஸார், நேற்று இவர்கள் இருவரையும் கைதுசெய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த உருத்திரகுமார் நிரோசன், நித்தியநாதன் நித்தியதுசேந்தன் ஆகிய இருவரையும் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தவிட்டார்.

கடமையில் இருந்த அரச ஊழியர் - தனது கடமையைச் செய்வதற்கு இடையூறாக இருந்ததாகவும், பொது வீதியின் விதிமுறை தவறி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதாகவும், அவர்கள் இருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ச)

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன

(ஆழியவளை)

வடக்கு - கிழக்கு மாகாண கல்விவலயங்களில் வெற்றிடமாகவுள்ள ஆசிரிய ஆலோசகர் பதவிகள், விரைவில் நிரப்பப்படவுள்ளன. இதற்கான நேர்முகப்பரீட்சைகள் - வலயக்கல்வி அலுவலகங்களில் நடைபெறவுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து, முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஆசிரியர்களின் விபரங்கள், வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சின் அடிப்படையில் பொருத்தமான ஆசிரியர்கள் - ஆசிரிய ஆலோசகர்களாக நியமிக்கப்படவுள்ளனர். (122)

# சின்னஞ்சிறு செய்திகள்

### சட்டவிரோதமாக மரம் வெட்டியவர்கள் கைது

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மரங்களை வெட்டிய இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தப் பகுதியிலுள்ள மரங்களை விறகுக்காக வெட்டி, சைக்கிளில் கட்டிக்கொண்டிருந்ததைக் கண்ட கிராம அலுவலர் - பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததை அடுத்து, இந்த இருவரும் கைது செய்யப்பட்டனர். (130)

### தரம் II இற்கான செயற்திட்டம்

எதிர்வரும் கல்வி ஆண்டில் தரம் II இற்கான விஞ்ஞான பாடத்தின் முழு அலகினையும் முதலாம், இரண்டாம் தவணையில் கற்பித்து முடிப்பதற்கான செயல் திட்டம் ஒன்றை, வலிகாமம் வலய விஞ்ஞானபாட ஆசிரியர்கள் வகுத்துள்ளனர். இதன்மூலம், மாணவர்கள் பாடசாலை விடுமுறை நாட்களிலும் பாடங்களை கற்கும் வாய்ப்பு ஏற்படுவதுடன், மூன்றாம் தவணையில் மீட்டல் வகுப்புக்களையும், பயிற்சி வகுப்புக்களையும் நடாத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)

### சுயதொழில் முயற்சிக்கு வட்டியில்லாக் கடன்

மருதங்கேணிப் பிரதேசத்தில் உள்ள 25 விதவைக் குடும்பங்களுக்குச் சுயதொழில் முயற்சிக்கென வடமராட்சி கிழக்கு கடற்தொழில் கூட்டுறவுச் சங்க சமாசத்தினர், தலா 15 ஆயிரம் ரூபாவை வட்டியில்லா கடனாக வழங்கியுள்ளனர். ஒவ்வொரு வருடமும் மாவீரர் தினத்தினை முன்னிட்டு, விதவைகளுக்கான கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

### மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை இயங்கவுள்ளது

மருதங்கேணி கிராம வைத்தியசாலை, ஜனவரி மாதம் அளவில் இயங்கத்தொடங்கும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த வைத்தியசாலையின் புனரமைப்புப்பணிகள் முடிவுறும் தறுவாயில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலை புனரமைப்பதற்கு - ஆசிய அபிவிருத்தி வங்கி 2 கோடியே 30 இலட்சம் ரூபாவினை ஒதுக்கியமை குறிப்பிடத்தக்கது. (122)

### திரைப்பட வட்டத்தின் காண்பியல் நிகழ்வு

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின், கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தினரால் - நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு சங்க மணடபத்தில் திரைப்பட வட்டத்தின் காண்பியல் நிகழ்வு - 3 இல் பூமணி இயக்கத்தில் உருவான "கருவேலம பூக்கள்" எனும் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இதில் 'நல்ல சினிமா ஊடாக இன்னுமொரு உலகினைக் காண ஆர்வலர் அனைவரும் வருக' என திரைப்பட வட்டத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### மோட்டார் சைக்கிளுக்குள் சேலை சுற்றியதால் பெண்ணொருவர் காயம்

உறவினர் ஒருவரின் மரணச் சடங்கிற்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சேலைத் தலைப்பு சுற்றியதால், வீதியில் தூக்கி வீசப்பட்டு ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் கட்டப்பிராய் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், காயமடைந்த அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த சிவபாதம் தவநாயகி (வயது 50) என்பவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டார்.


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்

பெயர் : ஜெ.வேணுஜன்
முகவரி : 665 கே.கே.எஸ்.றோட் வண்ணார்பண்ணை



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்

# மாடுகளின் குளம்புப் பாதுகாப்பு

காலநடை வளர்ப்பில் ஏராளமான விடயங்களோடு - அவற்றினுடைய வளர்ச்சி, நோய், பாதுகாப்பு என்று கால்நடையின் அனைத்து விடயங்களையும் கவனிக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

இந்தக் கால்நடைகளின் கால்களில் மிகமுக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய



பகுதியாக கால்க்குளம்புகள் காணப்படுகின்றன. இந்தக் குளம்புகள் மிகமுக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதும், பாதுகாக்கப்படவேண்டியதுமாகும்.

இதற்குக் காரணம் - குளம்புகளில் நோய் ஏற்படும்போது, பால் உற்பத்தியும், வளர்ச்சி வீதமும் பாதிக்கப்படுவதுடன், மாடுகளின் வாழ்க்கைக் காலமும் பாதிக்கப்படும். அதாவது குறுகியதாகும்.

இந்த நோயானது, எல்லா மாடுகளுக்கும் ஏற்படுகின்றதெனக் கூறமுடியாது. இருப்பினும், அதிகமான மாடுகளில் ஏற்படுகின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனைப் பொதுவான த்டுப்புமுறைகள் மூலமும், அவரவர் தங்கள் தங்கள் மாடுகளைக் கவனித்துக்கொள்வதன் மூலமும் கட்டுப்படுத்திக்கொள்ளலாம்.

ஒவ்வொரு பண்ணையாளரும், தமது மாடுகளின் பாதங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரிந்துகொள்ளவேண்டும். தகுந்தமுறையில் மாடுகளின் பாதங்களைப் (குளம்புகளை) பாதுகாத்துக்கொள்வதற்கு, கீழ்க்காணும் முறைகளைப் பயன்படுத்தலாம்.

★ தொற்றுநீக்கித் திரவம் ஒன்றில் மாடுகளின் பாதங்களை அமிழ்த்தி, தொற்று நீக்குதல்வேண்டும்.

★ சுகாதாரமானமுறையில் அடிக்கடி மாட்டுத்தொழுவங்களைத் தொற்று நீக்கிக் கொண்டு கழுவி, சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். ஒவ்வொருநாளும் கழிவுகளை அகற்றத்தவறக்கூடாது.

★ சுகாதாரமானமுறையில் தொழுவங்களைப் அமைத்து, அதில் மாடுகளைக் கட்டுதல்வேண்டும்.

★ மழை காலங்களில் ஈரமான தரையில் நீண்டநேரம் நிற்கவிடக்கூடாது.

கன்று பிறந்தவுடனும், உரிய காலங்களிலும் ஒழுங்கானமுறையில் மாடுகளின் குளம்புகளை சீவிப்பாதுகாக்கவேண்டும்.

★ முக்கியமாகப் பின்னங்கால்க் குளம்புகளையும், பின்னங்கால் வெளிப்புறக் குளம்புகளையும் பாதுகாக்கவேண்டும்.

மாடுகளின் குளம்புநோய்ப் பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணம் - அவற்றின் பிறப்புரிமை இயல்பிலும், மாடுகளின் தொழுவ அமைப்பிலும், அவற்றின் கவனிப்பிலுமே தங்கியிருக்கிறது.

அதாவது மாடுகளின் இனங்கள், சூழல் மற்றும் அமைப்புக்களுக்கு ஏற்ப குளம்புகள் பாதிக்கப்படும் தன்மையும் மாறுபடும்.

குளம்பு நொண்டுதல்நோய் ஏற்பட்ட ஒவ்வொரு மாடுகளுக்கும், குளம்பு சீவுவதால் ஏற்பட்ட பிரச்சினையே முக்கியமாக இருக்கிறது. மாடுகளுக்கு இந்தப் பிரச்சினை ஏற்படும்போது, நோய்த்தடுப்பிலும் குளம்பு சீவுதலே முக்கியமாகும். நொண்டும் பிரச்சினை இல்லாமல் இருக்கும் மாடுகளுக்கும், ஒழுங்கற்ற, கவனமற்ற குளம்பு சீவலினால் இந்த நொண்டும் பிரச்சினை ஏற்படவாய்ப்புண்டு.

எனவே, மாடுகளில் நொண்டும் நோயும், அதிலிருந்து ஏற்படும் பிறநோய்களும் ஏற்படாமல் இருக்க - மாடுகளின் குளம்புகளை உரிய காலங்களில் மிகவும் அவதானமாகச் சீவிச் சுத்தப்படுத்திக்கொள்ளுங்கள். இதனால், மாடுகளின் பாதங்களினூடாக நோய்கள் தொற்றுவதைத் தவிர்த்துக்கொள்ளாம். ஒழுங்கற்ற பாதங்களால் மாட்டின் கால் பாதத்தில் புண்கள் ஏற்பட்டு, அந்தப் புண்களினூடாக வேறு நோய்க்கிருமிகள் மாட்டின் இரத்தத்துடன் கலந்து, பாரிய நோய்களைக்கூட ஏற்படுத்திவிடக்கூடும். சாதாரணமாகச் சீவிச் சுத்தப்படுத்தவேண்டிய குளம்பினை அவதானமற்று விடுவதனால், உயிரினைக் கொல்லும் பெரிய தொற்றுநோய்கள் மாடுகளைத் தாக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். சில நோய்கள் ஒரு மாட்டிலிருந்து ஏனைய மாடுகளுக்கு இலகுவில் தொற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இரத்தத்துடன் கலக்கின்ற நோய்க்கிருமிகள் - தொற்று ஏற்பட்ட மாடுகளையும் தாக்கி, பட்டியிலிருக்கின்ற ஏனைய மாடுகளையும் தாக்கிப் பெரும் இழப்பை ஏற்படுத்தும்.

எனவே, குளம்புகளை உரிய காலங்களில் சீவிவிடுவதன்மூலம், கால் பாதங்களைப் பாதுகாப்பதோடு, ஏனைய தொற்றுநோய்களிலிருந்தும் மாடுகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இதன்மூலம் பொருளாதாரக் கஷ்டத்தையும் தவிர்த்துக்கொள்ளலாம். கால்நடைகள் எமது வாழ்வின் இரண்டாவது 'பணம்' என்பதை மனதில் கொண்டு, அவற்றை உரிய முறையில் கவனிப்போம்.

**இரா.காயத்திரி**

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

# அலங்காரத் தாவரங்களை கத்தரித்தல்

தற்போது மழைகாலம் ஆரம்பித்துவிட்டது. பெரும்பாலான வீடுகளில் அலங்காரத் தாவரங்களைக் கத்தரிப்பதைக் காணக்கூடியதாக இருக்கும். கத்தரித்தலை எவ்வாறு வினைத்திறனுடன் மேற்கொள்வது என்பதனை, இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

செவ்வரத்தை, போகன்விலா, ரோசா மல்லிகை, குரோட்டன் என்பவையே பொதுவாக எமது பிரதேசத்தில் அலங்காரத் தாவரங்காக வளர்க்கப்படுகின்றன. குறிப்பிட்ட சில நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தாவரப்பகுதியினை அகற்றுதல்- கத்தரித்தல் எனப்படும்.

பின்வரும் நோக்கங்களுக்காக கத்தரித்தல செயனமுறை மேற்கொள்ளப்படுகின்றது. இவை அலங்காரத் தாவரங்களின் வகைக்கேற்ப வேறுபடுகின்றன.

★ விரும்பிய வடிவத்திலும், அளவிலும் தாவரங்கள் வளருவதற்காகவும், செடிகளில் வட்டமான விதானத்தைப் பெறுவதற்காகவும்,

★ பூக்கள், இலைகள் என்பவற்றின் தரத்தை அதிகரிப்பதற்காகவும், புதிய கிளைகள் உருவாவதை தூண்டுவதற்காகவும்,



★ குறிப்பிட்ட எல்லைக்குள் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காகவும் (இடவசதி பற்றாக்குறைவான இடங்களுக்கு அது அவசியமாகும்) கத்தரித்தல் அவசியமானது.

அநேக அலங்காரத் தாவரங்களுக்கு ஒரே மாதிரியான கத்தரித்தலே அவசியமானது.

பருவகால வளர்ச்சி ஏற்படும்போதே பூக்களும், இளம் இலைகளும் உருவாகும். எனவே, புதிய கிளைகள் உருவாகுவதைத் தூண்டுவதற்கு, ஏற்கனவே பூக்கள் உருவான கிளைகளை அகற்றுதல் அவசியமாகும்.

செடிகளைக் கத்தரிக்காது விடும்போது, அவை உயரமாக வளரும். ஆனால், வீரியம் குறைவாக இருக்கும். செடிகளில் மேலதிகமாக இருக்கும் கிளைகளை அகற்றுவதன்மூலம் - பெரிய அளவில், தரமான பூக்கள் உருவாகுவதையும் தூண்டச் செய்யலாம்.

தாவரங்களைக் கத்தரிக்கும்போது, அவற்றின் மத்தியில் சூரிய வெளிச்சம் விழத்தக்கவாறும், காற்றோட்டம் இருக்கத் தக்கவாறும் - நெருக்கமான கிளைகளையும், குறுக்காக செல்லும் கிளைகளையும் அகற்றவேண்டும். பக்கக் கிளைகளில் உள்ள 2 அல்லது 3 அரும்புகளைத் தவிர, ஏனையவற்றை அகற்றவும். நெருக்கமாகக் காணப்படும் கிளைகளைக் கத்தரிப்பதன்மூலம், ஒரேயளவான சம இடைவெளி கொண்ட வடிவமைப்பைப் பெற முடியும்.

மற்றைய எல்லா அமைப்புக்களையும் விட, வட்டமான விதானம் சிறந்ததாகும். ஏனெனில், இது அதிகளவான பூக்களும், இளம் இலைகளும் உருவாக ஏதுவாக அமையும். ஒவ்வொரு பருவத்திலும் பிரதான தண்டுகளில் பூக்கள் உருவான கிளைகளை அரைவாசியாக அல்லது முன்றில் ஒரு பகுதியாகக் கத்தரிக்கவேண்டும். இந்தவேளையில், நெருக்கமாகக் காணப்படும் சிறிய கிளைகளையும் அகற்றவேண்டும். அத்துடன், பொருத்தமான உயரத்துக்குத் தாவரம் வளர்ச்சியடைந்ததும், அவற்றின் நுனிப்பகுதியைக் கத்தரிக் வேண்டும்.

ஒருவர் எதிர்பார்க்கும் பலனை கத்தரிப்பதால் மட்டும் அடையமுடியாது. எனவே கத்தரித்தலுடன் பசளையிடல், களைகளை கட்டுப்படுத்தல், பீடைகளை கட்டுப்படுத்தல், குறித்த இடைவெளியில் நீர் ஊற்றுதல் என்பவற்றையும் மேற்கொண்டால், அலங்காரத் தாவர வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

**தருவது : தகவல் தொடர்பு மையம்**

# தொழில் வங்கி




| நிறுவனம் | கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை செங்கலடி | ஒக்ஸ்பாம் (Oxfam) |
|---|---|---|
| வெற்றிடமாக உள்ள பதவிகள் | *விஞ்ஞானபீடம்*<br>1. கணிதப் பிரிவு பேராசிரியர்<br>2. தாவரவியல் பிரிவு பேராசிரியர்<br>3. பௌதீகவியல் பிரிவு பேராசிரியர்<br>4. இரசாயனவியல் பிரிவு பேராசிரியர்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I /II<br>விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை)<br>*விவசாயபீடம்*<br>1. பயிராக்கவியல் பிரிவு பேராசிரியர்<br>2. விலங்கு விஞ்ஞானவியல் பிரிவு பேராசிரியர்<br>3. விவசாயபொருளியல் பிரிவு பேராசிரியர்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)<br>*கலைகலாசாரபீடம்*<br>1. அரபிக் பிரிவு<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை)<br>2. சமூக விஞ்ஞான பிரிவு<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)<br>சமூகவியல், மானுடவியல் - வருகை விரிவுரையாளர்<br>3. விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) - இசை, நடனம். | திட்ட அலுவலர், கிளிநொச்சி. |
| அடிப்படைத் தகுதி | | - 3 வருட அனுபவம்<br>- க.பொ.த (உ/த)<br>- ஆங்கில புலமை. |
| வயதெல்லை | 45 வயதிற்கு மேற்படாதவர்கள் | |
| விண்ணப்ப முடிவு திகதி | 22.12.2003 | 9.11.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில்வந்து பார்வையிடலாம்.

# எந்தத் தொழிலை மேற்கொண்டாலும் அதனை மதித்து நடக்கவேண்டும்

**ஓவியத்துறையில் மிகுந்த ஈடுபாடும், ஆர்வம் கொண்டவரும், தற்பொழுது ஸ்கிறீன் பிறிண்டிங் தொழிலை சிறந்தமுறையில் செய்துவருபவரான - பிர பல ஓவியர் கே.ஜே.பி.ராஜாவை இந்தவாரம் எமது தொழில் மலருக்காகச் சந்திக்கிறோம்.**



***ஸ்கிறீன் பிறிண்டிங் (Screen Printing) தொழிலில் ஈடுபடுவதற்கான ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?***

நான் நீண்டகாலமாகப் பத்திரிகைத் துறை உள்ளிட்ட, பல்வேறுபட்ட ஓவியங்களை வரைவதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தேன். அக்காலகட்டத்தில் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் வெளிவந்த புத்தகங்களுக்கான அட்டைகள், சுவரொட்டிகள், கலண்டர்கள், அழைப்பிதழ்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பட்ட வெளியீடுகளுக்கான ஓவியங்களை - ஸ்கிறீன் பிறிண்டிங்மூலம் அச்சிடத்தக்க வகையில் கோட்டோவியங்களாக வரைந்திருக்கிறேன்.

இந்த ஓவியங்களுக்கான பல்வேறுபட்ட நிறங்களைக்கூட கணினியின் துணையின்றி, றோற்றிங்பேனா மற்றும் இந்தியன் மைகொண்டு தனித்தனி நிறங்களுக்கு அமைவாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறேன்.

இந்த நிலையில், ஓரளவு ஸ்கிறீன் பிறிண்டிங் தொடர்பான ஆரம்ப அறிவைப் பெற்றுக்கொண்டேன். மேலும் பல ஸ்கிறீன் பிறிண்டிங் தொடர்பான புத்தகங்களையும் படித்திருக்கிறேன். இவ்வாறு பத்திரிகைத்துறையுடனான தொடர்புகள் எனக்கு ஏற்பட்டது.

இந்தக் காலகட்டங்களில் எனது நண்பர்கள் என்னை ஸ்கிறீன் பிறிண்டிங் பழகுமாறு உற்சாகமூட்டினார்கள். எனது தொழிலின் தொடர்பினால் ஏற்பட்ட ஆர்வத்தினாலும், நண்பர்களினது ஆலோசனைகளுக்கும் அமைவாகவும் - இந்தியாவைச் சேர்ந்த ர.பரதன் ஆசிரியரிடம் இந்தக் கலையை முறையாகக் கற்றுக்கொண்டேன்.

***ஒரு சிறந்த ஸ்கிறீன் பிறிண்டராக வர விரும்புபவர்களுக்கு இருக்கவேண்டிய தகைமைகள் எவையெனக் கருதுகிறீர்கள்?***

இந்தத் தொழிலானது மிகவும் இலகுவாகச் செய்யக்கூடிய ஒரு சாதாரணமான குடிசைக் கைத்தொழிலாகும்.

இதனை ஆரம்பிப்பதறகுப் பெரியளவான மூலதனம் தேவையில்லை. ஏனெனில், ஆரம்பத்தில் சிறு அளவிலான முதலுடன் ஆரம்பித்து, பின்னர் பெரிய அளவிலான தொழிலாக எமது குடும்ப வருமானத்துக்கு அமைவாக மாற்றிக்கொள்ளலாம்.

இந்தத் தொழிலில் சிறப்பாக ஈடுபடுவதானால் - தன்னம்பிக்கை, துணிவு, பொறுமை என்பன இருத்தல் அவசியம்.

ஆரம்பத்தில் பல தவறுகள் இந்தத் தொழிலில் ஏற்பட வாய்ப்புண்டு. அவற்றைச் சகித்துக்கொண்டு, தவறுகளைத் திருத்தி, சரியானமுறையில் தொழிற்படவேண்டும்.

ஆரம்பத்திலேயே தவறுகளைக்கண்டு நாம் சோர்வுற்றால், நாளடைவில் நல்ல பிறிண்ரராக வரமுடியாது. இந்தத் தொழிலினை நாம் தொடர்ந்து மேற்கொள்ளும்போது, பல புதிய நுட்பங்களை அறிந்துகொள்ளலாம். எந்தத் தொழிலை நாம் செய்தாலும், அதனை மதித்து வாழ்தல் இன்றியமையாததாகும் என்று கூறியவரிடம் -

***ஸ்கிறீன் பிறிண்டிங்கில் அச்சிடுவதற்கும், நவீன இயந்திர சாதனங்கள்மூலம் அச்சிடுவதற்கும் இடையிலான வேறுபாடுகள் எவை? எனக் கேட்டோம்.***

நவீன இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி நாம் அச்சுத் தொழிலை மேற்கொள்வதாக இருந்தால், அதிகளவிலான மூலதனம் தேவை. அத்துடன், பெரிய அளவிலான இடவசதி மற்றும் ஆளணி என்பனவும் தேவை. ஸ்கிறீன் பிறிண்டிங் அச்சுக்கலையினை நாம் ஆரம்பிப்பதானால் - குறைந்த மூலதனத்துடன், சிறிய இடத்தில், குறைந்த ஆளணியுடனே ஆரம்பிக்கலாம். அத்துடன், பல்வேறுபட்ட ஊடகங்களிலும் அச்சிடக்கூடிய ஒரு சிறந்த தொழிலாக இன்று உலகளாவியரீதியிலேயே இந்த ஸ்கிறீன் பிறிண்டிங் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடதாசி, மரம், இரும்பு, பிளாஸ்ரிக், ஓலைகள், கண்ணாடிகள் மற்றும் வளைவான பொருட்கள் என்பவற்றில் வேண்டுமானாலும் நாம் விரும்பியபடி ஸ்கிறீன் பிறிண்டிங் செய்துகொள்ளலாம். இந்த வசதிகள் ஏனைய அச்சு இயந்திரங்களைப் பயன்படுத்தி இலகுவில் பெறமுடியாது.

***இந்தத் தொழிலுக்கு இருக்கும் எதிர்கால வாய்ப்புக்கள் பற்றிக் கூறுங்கள்?***

இந்த உலகில் நவீனதொழில்நுட்பம் எந்த அளவில் வளர்ச்சியடைந்தாலும், ஸ்கீறீன் பிறிண்டிங் தொழிலானது தனிப்பெருமையுடனேயே எப்போதும் விளங்கும் என்பது எனது கருத்து. அதாவது, உலகில் தொழில்நுட்பங்கள் அதிகரிக்க, அதிகரிக்க - ஸ்கிறீன் பிறிண்டிங்கின் தொழில்நுட்பமும் அதிகரித்துக் கொண்டே செல்லும். அண்மைக் காலங்களில் எத்தனையோ விதமான நவீனமுறையிலான ஸ்கிறீன் பிறிண்டிங் உபகரணங்கள் கண்டு பிடிக்கப்பட்டு வெளிவந்துள்ளன, தற்போதும் வெளிவந்து கொண்டிருக்கின்றன (ஸ்கிறீன் பிரிண்டிங் துணிவகைகள், இரசாயனங்கள் உட்பட). எனவே, இந்தத் தொழிலினை ஆரம்பிக்கும் எவராயினும், எதிர்காலத்தில் நல்ல பயனைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதே எனது கருத்து.

***இதற்கான மூலப்பொருட்களை எங்கிருந்து பெற்றுக்கொள்கிறீர்கள்?***

தற்போது யாழ்ப்பாணத்திலேயே இதனை எம்மால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக, இங்குவரும் பெரும்பாலான மூலப்பொருட்கள் இந்தியாவிலிருந்து தயாரிக்கப்பட்டவையேயாகும். எனினும், ஸ்கிறீன் பிரிண்டிங் மை வகைகள் இலங்கையிலும் சிறந்தமுறையில் தயாரிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் ஆரம்பத்தில் தொழில் தொடங்கும்போது, அடிக்கடி பயன்படக்கூடிய மிகவும் முக்கியமான இரசாயனங்கள், போல்டிங் துணி வகைகளைச் சேமித்து வைத்திருந்தால், எமக்கு வேலைகள் வரும்போது - பேப்பர், மட்டைகள் போன்ற மூலப்பொருட்களைச் சாதாரணமான புத்தகக் கடைகள், காதிதாதிகள் விற்பனை நிலையங்கள் என்பவற்றிலிருந்தே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இவற்றைத்தவிர சில மூலப்பொருட்களைக் கொழும்பிலிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது என்றுகூறி, தனது செவ்வியை நிறைவு செய்தார்.


அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் இந்தத் தொழிலுக்கான ஆர்வம் அதிகரித்து வரும்நிலையில், இவருடனான சந்திப்பு - ஸ்கிறீன் பிறிண்டிங் தொழிலை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக அமையும் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை.

**நேர்காணல் - இரா.சுபோதினி**

# வாரம் ஒரு சிறுதொழில்

சிறிய முதலீட்டில் ஆரம்பிக்கக்கூடிய தொழில்கள் பலவுள்ளன. குடும்ப உறுப்பினர்களே இணைந்து, வீட்டிலிருந்து மேற்கொள்ளக்கூடிய சிறியதொழில் முயற்சிகள் பற்றிய விபரங்களைத் தருகின்றோம்.

அந்த வகையில், இந்தவாரம் சிறு முதலில் ஆரம்பிக்கக்கூடிய தொழில்கள் இரண்டைப் பற்றிப் பார்ப்போம்.



## வாசனை வீசும் மெழுகுவர்த்திகள்

வீடுகளிலோ அல்லது தொழில் அமைப்புக்களிலோ திடீரென மின்சாரம் அணையும் பொழுதும், ஏனைய பல தேவைகளுக்கும் உடனடியாகக் கைகொடுப்பவை மெழுகுவர்த்திகள். சாதாரணமாக மெழுகுவர்த்திகள் வெளிச்சத்தை மட்டும் தான் தரக்கூடியவை. ஆனால், இந்த வகையான வாசனை வீசும் மெழுகுவர்த்திகள் - வெளிச்சத்துடன், நல்ல சுகந்த வாசனையையும் தரவல்லது.

இந்த மெழுகுவர்த்திகளைத் தயாரிக்க, நல்ல வாசனையுள்ள எண்ணெய் (சென்ட்) தேவைப்படும். மெழுகை உருக்கி, வடிகட்டி எடுத்து, அச்சில் விடுவதுக்கு முன்னர் - அவரவர் விருப்பப்படி தேவையான வாசனையுள்ள எண்ணையை (சென்ட்) மெழுகுடன் கலந்துவிடவேண்டும். இந்த வகையான மெழுகுவர்த்தியை எரியவிட்டால், நல்ல வாசனை வீசும்.

## நுளம்பை விரட்டும் மெழுகுவர்த்திகள்

இந்த வகையான மெழுகுவர்த்திகள் எரியுமிடத்தில் நுளம்புகள் வருவதில்லை. இந்த வாசனையை நுகரும் நுளம்புகள் பறந்துவிடும்.

## தயாரிக்கத் தேவைப்படும் பொருட்கள்


வெள்ளை மெழுகு - 600 கிராம், யூகலிப்ரஸ் எண்ணெய் - 2 மில்லி லீற்றர், சிட்ரெனெல்லா எண்ணெய் - 2 மில்லி லீற்றர், ஸ்டேரிக் அஸிட் - 2 மில்லிலீற்றர்

வெள்ளை மெழுகை பாத்திரத்தில் போட்டு, ஸ்டேரிக் அஸிட்டைச் சேர்த்து, நீராக உருகும் வரைக்கும் காய்ச்சவும். பின் வடிகட்டி, அதில் யூகலிப்ரஸ் எண்ணெய், சிட்ரெனெல்லா எண்ணெய் ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகக் கலந்து, அச்சில் விடவேண்டும். இதற்கு சாதாரண நூல் திரிகளையே பயன்படுத்தலாம். இந்தமுறையில் தயாரிக்கப்படும் மெகுவர்த்திகள் - எரியும் பொழுது நல்ல வாசனை வீசும். அந்த வாசனைக்கு நுளம்புகள் பறந்துவிடும். தயாரிப்பதும் சுலபம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 80/= | 50/= | 100/= | 70/= | 80/= | 70/= | 50/= |
| வெண்டிக்காய் | 15/= | 40/= | 30/= | 15/= | 40/= | 20/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 90/= | 70/= | 90/= | 90/= | 90/= | 80/= | - |
| கத்தரிக்காய் | 80/= | 80/= | 110/= | 70/= | 110/= | 60/= | 80/= |
| பாகற்காய் | 70/= | 60/= | - | 80/= | 70/= | 80/= | 80/= |
| கரட் | 40/= | 70/= | 70/= | 50/= | 70/= | 30/= | 60/= |
| பீற்றூட் | 30/= | 40/= | 50/= | 20/= | 40/= | 40/= | 30/= |
| முருங்கைக்காய் | 100/= | 60/= | - | 80/= | 100/= | 80/= | 80/= |
| வெங்காயம் | 40/= | 60/= | 50/= | 45/= | 45/= | 45/= | 50/= |
| பச்சை மிளகாய் | 80/= | 60/= | 90/= | 50/= | 100/= | 90/= | 60/= |





# உரிமை கேட்டுப்போராட வந்தவர்கள் கட்சித் தலைமைக்கு தெருவில் போர்

ஆளும் வர்க்கத்தில் இரண்டு கட்சிகளின் தலைமைப்பீடங்களும் அதிகாரப்போட்டியில் ஈடுபட்டு நிற்பதால், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லமுடியாத துரதிர்ஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று, சமாதானத்தை விரும்பும் விடுதலைப் புலிகளின் தலைமையும், சர்வதேச சமூகமும் கவலை தெரிவித்திருக்கின்றன.

இந்த சந்தர்ப்பத்தில் தமிழ்மக்களின் பாதுகாப்புக்கும், கௌரவத்துக்கும், சுதந்திரத்துக்குமாகப் போராடி, வாதாடி உரிமைகளைப் பெறுவதற்காக, கடந்த பொதுத்தேர்தல்களில் மக்களின் ஆணையைப் பெற்றவர்கள் - கொழும்பில் அடிதடியில் இறங்கி அசிங்கப்பட்டுக் கொண்டு நிற்பது, தமிழ் மக்களுக்கு தலைகுனிவையே ஏற்படுத்தும்.

இனப்பிரச்சினைக்கு ஒருதீர்வைக் காண்பதற்கு இருபெரும் கட்சிகளும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். போர்நிறுத்தத்தினால் தமிழ் மக்கள் எந்த நன்மையும் பெறவில்லை. போர் நிறுத்தத்தினால் விடுதலைப் புலிகள் தான் அதிக இழப்பைச் சந்தித்திருக்கிறார்கள். சிங்களப் பெரும்பான்மை மக்களே, போர் நிறுத்தத்தினால் அதிக நன்மை அடைந்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட தமிழ் தாயகமக்கள்- புனர்வாழ்வு புனரமைப்புப் பெறுவதற்கு விடுதலைப் புலிகள் - இடைக்கால தன்னாதிக்க அதிகார சபை நிறுவப்படவேண்டுமென்று திட்டவரைபு ஒன்றைச் சமர்ப்பித்திருந்தனர். இது அரசிடம் கொடுக்கப்பட்டதும்தான், சந்திரிகா மூனறு அமைச்சுக்களைப் பறித்து அதிரடி நடவடிககை எடுத்தார். இன்னும் ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பும், ஒரு முடிவுக்கு வரவில்லை.

இருதரப்பும் இனப்பிரச்சினையில் - விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை நிறுவுவது சம்பந்தமாக, ஒரு நல்லமுடிவுக்கு விரைவாக வரவேண்டுமென்றும், சமாதான முடிவுகாண்பது சிங்களப் பெரும்பான்மையினர் கையில் தான் உள்ளதென்றும் தலைவர் வே.பிரபாகரன் திட்டவட்டமாகத் தனது மாவீரர் தின உரையில் தெரிவித்திருந்தார்.

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையைச் சிங்கள மக்கள் பொதுவாகப் பாராட்டி வரவேற்றிருக்கின்றனர். பாராட்ட மன மில்லாதவர்களும், அதை வரவேற்க விருமபமில்லாதவர்களும்கூட, அந்த உரையில் பெரிதாகக் குறையோ, குற்றமோ காணமுடியவில்லை. அவர்களும் சந்திரிகா - ரணில் அதிகாரப் போட்டியையே குறைகூறுகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு இதுவரைகாலமும் சமாதானத் தீர்வுகாண்பதற்குத் தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபடவேண்டும் என்றும், தமிழ் மக்கள் பல்வேறு கட்சிகளாகப் பல தலைமைகளின் கீழ் பிரிந்து நிற்பதால், சிங்களத் தலைமைகள் இதனைப் பயன்படுத்தி தமிழ் மக்களை கூறுபோட்டு, தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்கின்றனர் என்று தமிழ் மக்கள் கவலைப் பட்டுவந்திருக்கின்றனர்.

காந்திய வழியில் தமிழர்கள் சாத்வீகப் போராட்டம் நடத்திய காலத்தில், தமிழ்தலைமைகள் இரண்டாகப் பிளவுபட்டு நின்றதால், மூன்றாவதாக சிலரை தங்கள் கைக்குள் வைத்து ஆட்சி அதிகாரத்திலிருந்த சிங்கள அதிகார வர்க்கம் - தமிழர்களைச் சீர்குலைத்து, தமது காரியத்தை நிறைவேற்றிக்கொண்டனர்.

இப்பொழுது விடுதலைப் புலிகளின் ஆயுத பலமும், ஒரே தலைவரின் கீழ் தமிழ் மக்கள் ஓர் அமைப்பில் கட்டுக்கோப்பாக இருப்பதால்தான் உலக நாடுகளும், சிங்கள மக்களும் அதற்கு மதிப்புக்கொடுத்து பேச்சுவார்த்தைக்கு முன்வந்தன. இந்தப் பலமும், கட்டுக்கோப்பும்தான் மாவீரர்தின உரையில் தலைவர் பிரபாகரன் என்ன சொல்லப்போகிறார் என்பதைக் கேட்பதற்கு உலகமே காத்துநிற்க வைத்தது.

தமிழ் மக்கள் நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும், கௌரவமாகவும், சுயநிர்ணய உரிமையுடனும் வாழ்வதற்கு, நீங்கள் இணைந்து ஒரு நல்லமுடிவை விரைவில் மேற்கொள்ளவேண்டும். இல்லையேல், நாங்கள் அதை முடிவு செய்யநேரிடும் என்றும் பிரபாகரன் சொல்லியிருக்கிறார்.

அடுத்து என்ன நடக்கும். சந்திரிகாவும். ரணிலும் இப்படியே ஆதிக்கப்போட்டியில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்க, தமிழர்கள் மேலும் மேலும் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார்களா?

தேசிய அரசுமில்லை. நல்லிணக்க அரசும் இல்லை. சந்திரிகாவுக்கும் - ரணிலுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு காண்பதற்காக சந்திரிகாவினதும், ரணிலினதும் செயலாளர்கள் மட்டத்தில் நியமிக்கப்பட்டசபையும் எந்த முடிவும் எடுக்கமுடியாமல், சில நாட்கள் கூடிக் கதைத்து கலைந்துவிட்டனர்.

இதேசமயம், ஜே.விபியுடன் உறவு வைத்துக்கொள்ளவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி நடத்திய பேச்சுவார்த்தைகளும் முடிவற்ற நிலையில், முடிந்தும் முடியாமலும் உள்ளன.

சந்திரிகா பொறுப்பெடுத்த மூன்று முக்கிய அமைச்சுக்களில் ஒன்றான ஊடகத்துறை அமைச்சு - சந்திரிகாவின் பிரசாரத்துக்காக நனகு பயன்படுத்தப்படுகிறது.

இதேசமயம், கிழக்கில் முஸ்லிம்களையும், தமிழர்களையும் மோதவிடுவதில் சில சக்திகள் நன்றாகவே செயற்படுகின்றன. திருகோணமலையில் - கிண்ணியாவில், மூதூரில் எங்கே மோதல்கள் நடந்தாலும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் எங்கே இருந்தாலும், உடன் ஜனாதிபதிக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுகிறார்கள். ஜே.வி.பியும் ஜனாதிபதிக்கு முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்கிறது. சிஹல உறுமய, ஈ.பி.டி.பி. பற்றிக் கேட்கத்தேவையில்லை. முன்னர் ஈ.பி.டி.பிக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்படி ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சருக்குக் கோரிக்கை விடுத்தவர்தானே!

திருகோணமலை, மூதூர், கிண்ணியா சம்பங்களில் தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படுகிறது. அவர்களும் வீடிழந்தும், ஊனமடைந்தும் உள்ளனர். அவர்களும் அகதிகளாக இடம்பெயர்ந்து அல்லற்படுகின்றனர். அவர்களுக்கு உணவுப்பொருட்களைக் கொண்டுசெல்வதற்கே முஸ்லிம்கள் தடை செய்கின்றனர். இந்த நிலையில் இந்தியாவில் நிற்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் - முஸலிம் இளைஞர்கள் தற்காப்புக்காக ஆயுதம் ஏந்த வேண்டிவருமென்று கூறியிருக்கிறார்.

ஒருவேளை விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்தியாவிடம் ஹக்கீம் ஆயுத உதவி உதவி கேட்கிறாரோ தெரியவில்லை. முன்பு பேரியல் அஷ்ரப்பும் - முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவார்கள் என்று கூறியிருந்தார்.

எப்படியோ தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் உரிமைக்குரலை அடக்கி, ஒடுக்குவதற்குப் பல முனைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களைப் பாதுகாக்கும்படி எவரும் ஜனாதிபதியிடமோ, வேறு எவரிடமோ எவரும் கோரிக்கைவிடவில்லை.

இந்த நிலையில், ஆட்சிபீடத்துக்கு நடைபெறும் அதிகாரப்போட்டியில், இரு கட்சிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்படவில்லையானால், மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் வருவது தவிக்கமுடியாததாகிவிடும். பொதுத் தேர்தல் நிச்சயம் நாட்டில் பலவழிகளில் மோதல்களை ஏற்படுத்தும். அத்துடன், இனக்கலவரங்களும் ஏற்படலாம்.

**அசிங்கமான தெருச்சண்டை**

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயகவழியில் குரல் கொடுக்க முன்வந்து, மக்களின் ஆதரவையும், ஆணையையும்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி - தலைமைப் பதவிக்காக இன்னமும் சண்டைபோட்டுக்கொண்டு இருக்கப்போகிறதா?

தலைவர் ஆனந்தசங்கரி - தான் கூட்டணியின் கொள்கைக்கு மாறாக நடக்கவில்லை என்றும், தன்மீது எந்தத் தவறும்இல்லை என்றும் கூறுகின்றார். சரி, அவர் சொல்வதுபோல், அவர்மீது எந்தக் குற்றமும் இல்லை என்று வைத்துக் கொள்வோம்.

ஆனால், அவர்மீது குற்றம் சுமத்தி கூட்டணிக் கிளைகளும், பொதுச்சபையும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன. ஆனந்தசங்கரி தூய்மையானவராகவே இருந்தாலும், அவர்மீது கூட்டணிக் கிளைகளும், கூட்டணியின் உயர்மட்டச் சபையும் அவநம்பிக்கையும், அதிருப்தியும் தெரிவித்தபின், அந்தத் தலைவர் பதவியிலிருந்து அசிங்கப்பட வேண்டுமா? தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில் தலைவராகப் பதவிவகிக்கும் நாம், பிளவுபட்டு அசிங்கப்பட வேண்டாம் என்று தூக்கியெறிந்துவிட்டு, ஆனந்தசங்கரி தலைநிமிர்ந்து சென்றால் - பாராட்டுக்குரியவராவார். இதை விடுத்து, தலைமைப் பதவியைக் காப்பாற்ற வாதிட்டு நிற்பாரானால் - அசிங்கமாகவே தோன்றுவார். தமிழ் மக்களின் உரிமையை மறுப்பதற்குரிய அதிகாரத்துக்காக சந்திரிகாவும், ரணிலும் ஆதிக்கப் போட்டியிலீடுபட்டுள்ளனர்.

இங்கே உரிமைக்காகப் போராடப் புறப்பட்ட தமிழ் பிரதிநிதிகள் - கட்சித் தலைமைப் பதவிக்குத் தெருவிலிறங்கிச் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். வெட்கம்....! வெட்கம்....!

**எஸ்.எம்.ஜி.**

# ஊனமுற்றவர்களின் புனர்வாழ்வுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவுமா?

யாழ்.மாவட்டத்தில் இன்று செவிப்புலன் பாதிக்கப்பட்ட பெருந்தொகையான குழந்தைகள், இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பலர் இனங்காணப்படாதிருக்கின்றனர். அதற்கு முக்கியகாரணம் - இந்தக் குறைபாடு வெளித்தோற்றத்தில் கண்டுபிடிக்க முடியாததொன்றாகும். இன்றைய யுத்தநிலையில் இந்த நிலை இன்னும் வளர்ந்துசெல்லும் வாய்ப்புக்கள் உண்டு. இவர்களின் புனர்வாழ்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனப் பலகாலமாக வலியுறுத்தப்பட்டுவந்தும், இதுவரை திட்டவட்டமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருப்பது வேதனைக்குரியதாகும். தற்பொழுது சில அரசசார்பற்ற நிறுவனங்கள் தரவுகள் சேகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருவதாக அறியப்படுகிறது. ஆனால், தரவு சேகரிப்பதோடு மட்டும் நின்றுவிடாது, தொடர் நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டுமென வலியுறுத்தப்படவேண்டும்.

இன்று யாழ்.மாவட்டத்தில் செவிப்புலனிழந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சேவைகள்தான் என்ன? கைதடியில் செவிப்புலன் இழந்தவர்களுக்கென ஓர் மதத்தாபனத்தால் ஓர் பாடசாலை நடாத்தப்படுகிறது. இது ஓர் மதஞ்சார்ந்த தனியார் பாடசாலையாகக் கணிக்கப்படுவதால், அரச கவனமோ, உதவிகளோ நேரடியாகக் கிடைக்கும் வாய்ப்புகள் கிடையாது. ஏனைய பாடசாலைகளில் இருந்து சிறந்த ஆசிரியர்களை இப் பாடசாலைக்கு மாற்றமுடியாதநிலை. மறு புறத்தில் எல்லாப் பெற்றோரும் பிள்ளைகளைக் கைதடிக்கு அனுப்ப விரும்புவதுமில்லை. இதற்குப் பல காரணங்களும் உண்டு.

1) சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பிரிந்துவாழ விரும்பாதிருக்கின்றனர்.

2) வேறு சிலர் இவ்வாறு பிள்ளைகளைக் கைதடியில் சேர்த்தால், தமக்கிழுக்காகவும் கருதுகின்றனர்.

3) இன்னும் சிலர் பிள்ளைகளைக் கைதடியில் சேர்த்தால், தங்கள் பிள்ளைகளும் கைப்பாஷையைக் கற்றுவிடுவர். இருக்கிற பேச்சும் போய்விடுமெனப் பயப்படுகின்றனர்.

4) வேறு சிலர் பிள்ளைகளைக் கைதடிக்குக் கூட்டிச்செல்வதும், பின் லீவு நாட்களுக்குத் திரும்பிக் கூட்டி வருவதும் சிரமமெனக் கருதுகின்றனர்.

5) இன்னும் சிலருக்குப் பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பதால், ஏற்படக்கூடிய செலவுகளைத் தாங்க முடியாதநிலை.

6) வேறு சிலருக்குத் தங்கள் குழந்தை உண்மையில் செவிப்புலனிழந்ததுதானா என்பதை நிச்சயப்படுத்த முடியாதநிலை.

7) இன்னும் சிலருக்குக் கல்வி கற்பதனால் பிள்ளை உண்மையாக பயன் அடையுந்தானா என்ற சந்தேகம்?

மேற்கூறிய காரணங்களாலும், வேறு காரணங்களாலும் பலர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாதிருக்கின்றனர். இவர்களைவிட, மேலும் சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளை செவிபபுலக் குறைபாடுள்ள பிள்ளையென்று தெரிந்தும், விசேட பாடசாலைக்கு அனுப்பவிரும்பாது, தங்களுக்குப் பக்கத்திலுள்ள சாதாரண பாடசாலைளில் தங்கள் செல்வாக்கைப் பிரயோகித்து அனுப்பி வைக்கின்றனர். ஆனால், இந்தப் பிள்ளைகள் அங்குசென்று பின்வாங்குகளிலிருந்து நேரத்தைக் கடத்திவிட்டு, வீடு திரும்புகின்றனர். வேறு சில பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று சில வருடங்கள் கல்வியைத் தொடர்ந்து, பின் இடைநடுவில் நிறுத்திவிட்டு, வீட்டில் பெற்றோர்க்குத் தொல்லைகொடுத்துக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலையைக் கண்டும் காணாதவர்களாக இருக்க முடியுமா? இந்தநிலை தொடருமானால், இன்னும் சில வருடங்களில் இவர்களின் எண்ணிக்கை பன்மடங்காகும். எந்தவித புனர்வாழ்வையும் அளிக்கமுடியாத, கட்டுப்பாடற்ற, மன நிலையும் குன்றிய ஓர் கும்பலாகவே இவர்கள் காணப்படுவர்.

இந்த நிலையைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் சில முன்வைக்கப்படுகின்றன.

1) தற்பொழுது ஒரு பிள்ளை செவிப்புலக் குறைபாடுள்ள பிள்ளையெனச் சந்தேகிக்கப்பட்டால், அதைப் பரிசோதிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு நிலையம் இல்லை. இவ்வாறான ஓர் நிலையத்தை அமைத்துதவுமாறு பல்வேறு தாபனங்களுக்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், எதுவும் உருப்பெறவில்லை.

2) ஒரு பிள்ளை செவிப்புலக் குறைபாடு உள்ளதாகக் காணப்பட்டால், அதற்குப் பொருத்தமான செவிப்பன்னியையோ அல்லது காதச்சையோ பெறுவதனால், பெருந்தொகைப் பணத்தைச் செலவுசெய்து, கொழும்புக்கே செல்லவேண்டியுள்ளது. முதலாம் பந்தியில் கூறப்பட்ட செவிப்புலப் பரிசோதனை நிலையம் ஒன்று அமைக்கப்படுமிடத்து, அதோடு இணைந்து இக்கருவிகள் விற்பனை நிலையமொன்றையும் அமைத்துக் கொள்ளலாம். கருவித் திருத்தங்கள், உதிரிப்பாகங்கள் என் பவற்றையும் இங்கேயே வழங்கமுடியும்.

3) பாடசாலைக்குச் செல்லாத, பாடசாலைக் கல்வியை இடை நடுவில் நிறுத்திய பிள்ளைகளுக்கு - ஓர் அடிப்படைக் கல்வியை அளிக்கும் ஓர் பயிற்சி நிலையம் அமைக்கப்படவேண்டும்.

4) இந்த நிலையத்தோடு இணைந்ததாக பாடசாலைக் கல்வியை முடித்தவராயினும் சரி, முடியாதவராயினும் சரி ஓர் தொழிற் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் வகையில், ஓர் வதிவிட தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கப்படல் வேண்டும். இவ்வாறான நிலையங்கள் நாட்டின் தென்பகுதியில் - கண்டி, பத்தேகம ஆகிய இடங்களில் சமூக சேவைப் பகுதியால் நடாத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நடவடிக்கைகளை எடுப்பதன்மூலம்தான், செவிப்புலன் இழந்தோர் வாழ்வில் ஓர் விடிவைக் காண முடியும். இந்தப் பொறுப்பை அரசோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ ஏற்க முன்வருமா? இது தட்டிக்கழிக்க முடியாததொன்று. மனிதாபிமான ரீதியிலேனும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனப் பணிவுடனும், தாழ்மையுடனும் தெரிவிக்கப்படுகின்றது.

க.கோபாலகிருஷ்ணன்
செயலாளர்,
ஊனமுற்றோர்
புனர்வாழ்வுச் சங்கம்.



## தமிழ் மக்களுக்காக,

புனர்வாழ்வு மீள்குடியமர்தல் மற்றும் அகதிகள் விவகார அமைச்சு பொறுப்பிலுள்ள நான், வடக்கை முழுமையாகப் பொறுப்பேற்றுள்ளேன்.

கடந்த சில வருடகாலமாக ஏற்பட்ட கடுமையான யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், அவர்களின் உடமைகள் அனைத்தையும் இழந்தனர். முக்கியமாக வன்னியில் சுமார் ஒரு லட்சம் மக்கள் பெரும் துன்பத்துக்கு உள்ளாகினர். அங்கு நோய்க்குப் பயன்படுத்துவதற்குக்கூட ஒரு பெனடோல் இருக்கவில்லை. பிறந்த குழந்தையின் தொப்பூள்கொடி வெட்டுவதற்கு ஒரு கத்தரிக்கோல் இருக்கவில்லை. இரத்தம் பரிசோதிப்பதற்குக் கருவிகள் இருக்கவில்லை.

நான் இந்த மக்களின் துன்பத்தை எதிர்க்கட்சியில் இருக்கும்போதே நன்கு உணர்ந்துள்ளேன். அப்போது யுத்தம் உக்கிரமானநிலையில் இருந்தது. அவ்வேளை, அந்த அப்பாவி மக்களின் துயரம் அறியாது பலர் இருந்தபோது, நான் வன்னிசென்று, அம்மக்களின் துயர்துடைக்க முயன்றேன். அதனால், அன்றைய ஆளும்கட்சி என்னை புலிகளென அச்சுறுத்தினர். இக்காலகட்டத்தில்தான், இன்றைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் புதிய அரசு தோற்றம் பெற்றது. இதன்போது, கம்பஹா மாவட்டத்தில் அதிக சிங்கள மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றத்திற்குத் தெரிவான எனக்கு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தப் பொறுப்பை கையளித்தார்.

20 வருடங்களாகச் சீரழிந்த வடபகுதியை, ஒரு வருடகால குறுகிய இடைவேளைக்குள் சீரானநிலைக்குக் கொண்டுவருவதென்பது சற்று கடினமான முயற்சி. அதற்கு யாருக்கும் தகுதி இருக்கவில்லை. ஆனால், நான் வடபகுதியைப் புனரமைப்பதற்கு நல்ல பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதோடு, அதற்காக இரவுபகலாக பல முயற்சிகளையும் எடுத்து வருகின்றேன். உலக உணவுத் திட்டத்தின்மூலம் இதன்மூலம், மிதிவெடிகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறேன். வடக்கு மக்களுக்கு தேவையான உலர்உணவுப் பொருட்களை பெற்றுக்கொடுத்ததுடன், தாய்சேய் போசாக்கின்மையை ஒழிப்பதற்கும் புதிய செயற்திட்டம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளேன்.

எனது தலைமையில் - எனது அமைச்சின் மூலமாக வட பகுதியைப் புனரமைப்பதற்குத் தேவையான யோசனைகள் ரோக்கியோ உதவிவழங்கும் மாநாட்டின் மூலம் எடுக்கப்பட்டது. இம் மாநாட்டின் மூலம் எங்களுக்குக் கிடைத்த பெருந்தொகையான பணத்தை வடபகுதிப் புனரமைப்புக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். வெறும் கூரைத் தகடுகள், சீமெந்து மூடைகளை மட்டும் வழங்கி, ஓரிரு வீடுகளைச் சீராக்குவது மட்டும் எனது நோக்கமல்ல. வடபகுதி 21 ஆம் நூற்றாண்டில் எல்லாத் தேவைகளையும் உள்ளடக்கிய பெரும் அபிவிருத்தியை நோக்கிச் செல்லவேண்டுமென்பது எனது எதிர்பார்ப்பாகும்.

அதற்காக நான் பெரிய திட்டமொன்றை அமைத்து வைத்துள்ளேன். நான் எதிர்பார்த்ததுபோல், வடக்கினைப் புனரமைப்பதற்கு, தற்போது கிடைத்துள்ள பணத்தை ஒதுக்கியுள்ளேன்.

கடந்த சில மாதங்களாக எனது விடாமுயற்சியின் பிரதிபலனாக, யாழ்.நூலக வேலைகள் 100 இற்கு 90 வீதம் நிறைவடைந்துள்ளன. இந்த நூல் நிலையத்தை தெற்காசியாவில் சிறந்த தேசிய நூலகமாக மாற்றுவதற்கு யுனெஸ்கோ அமைப்பிடமிருந்து பணம் பெற்றுள்ளேன். இன்னும் ஐரோப்பிய ஒன்றியத்தின் யூரோ நாணயம் ஆறு லட்சம் செலவில் யாழ்ப்பாணத்திலுள்ள 55 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளது. மேலும் உலக உணவுத் திட்டத்தை நான் வடக்குக்கு கொண்டுவந்துள்ளேன். அதன்மூலம் 22 மில்லியன் ரூபா வடக்கு அபிவிருத்திக்காக கிடைத்துள்ளது. இதைவிட, நீர் வழங்கல் திட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நோர்வே அரசு நிதியுதவி வழங்கமுன்வந்துள்ளது. எனக்கு வடக்கில் எந்தவித அரசியல் நோக்கமும் இல்லை. அங்கு தேர்தலில் நிற்கவும் எண்ணமில்லை. ஆனால், அன்றுபோல் இன்றும், இன்றுபோல் என்றும், நான் வடக்கு மக்களுக்காக சேவையாற்றுவதற்கு என்னை அர்ப்பணிப்பதற்கு தயாராகவுள்ளேன்.

# வைத்திய கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன, பா.உ

## எம்.பி.பி.எஸ். (இலங்கை) எப்.ஐ.சி.எஸ். (அமெரிக்கா) எம்.டி.

## புனர்வாழ்வளிப்பு, அகதிகள், மீள்குடியமர்த்துகை அமைச்சு

(சி-1860)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*மருண்டவன் கண்ணுக்கு*
*இருண்டதெல்லாம் பேய்*
-பழமொழி.

## நமது நோக்கு

### தமிழ் - முஸ்லிம் உறவைச் சிதைக்கும் சந்திரிகாவின் பேச்சும், செயலும்

கடந்த சில நாட்களாக கிழக்கில் நடந்து வரும் வன்முறைகள் மற்றும் அசம்பாவித சம்பவங்களுக்கு காரணம் யார், அல்லது அதற்கு பின்னணியாகவுள்ள சக்தி எது என்பது இன்னமும் ஆதாரபூர்வமாக இனங்காணப்படவில்லை, எல்லா வற்றிற்கும் மேலாக இந்த வன்முறைகளின் இலக்கு என்னவென்பதும் சரியாகத் தெரியவில்லை.

ஆனாலும், தமிழ்மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே ஏதோ ஒரு வகையில் ரணகளம் ஒன்றை ஏற்படுத்தி, அவர்களிடையே ஒருநிரந்தரமான பகைநிலையை ஏற்படுத்துவதன் மூலம் தமது அரசியல் அபிலாசைகளை எட்டமுனையும் தீயசக்திகளின் "சதி" நடவடிக்கைதான் இது என்பது சமாதானத்தை நேசிக்கும், அமைதிக்காகப் பாடுபடும் மனிதநேய ஆர்வலர்களின் கருத்தாகும்.

ஏற்கனவே சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பறித்து அல்லது மட்டுப்படுத்தி அவர்களை இரண்டாந்தர பிரஜைகளாக்கி, தங்களது அரசியல் இலக்கினை எட்ட - பௌத்த சிங்கள அரசியல் தலைமைகள் காலங்காலமாக எத்தனையோ சதி மூலோபாயங்களைக் கையாண்டு வந்துள்ளமையை எவருக்கும் விபரிக்கவேண்டியதில்லை.

சிறுபான்மை மக்களிடையே புரிந்துணர்வுடன் கூடிய நல்லுறவுகள் இறுக்கமடைவதை பெரும்பான்மை சிங்கள அரசியல்வாதிகள் ஒருபோதுமே விரும்பியதுமில்லை, அனுமதித்ததுமில்லை. அது தங்களின் மேலாதிக்க சிந்தனையுடன் கூடிய ஒடுக்குமுறை ஆட்சிக்கு இடையூறாக அமைந்துவிடுமென்றே அவர்கள் கருதிவந்துள்ளனர்.

கடந்த பல தசாப்தங்களாகவே சிறுபான்மை சமூகத்தவரை வெறும் பணத்திற்கும், பதவிக்கும் அடிபணியப்பண்ணி விடலாம் என்றே சிங்களத் தலைமைகள் மதிப்பீடு செய்திருந்தமையும் உண்மையேயாகும்.

அதற்கேற்ப சிறுபான்மையின் மிதவாதத் தலைமைகளும் நடந்து வந்துள்ளதை மட்டுமல்ல, நடந்து வருவதையும் கூட எவரும் மறுக்கமுடியாது.

தமிழர் தலைமைகள், விட்ட தவறுகளின் விளைவுகள் தமிழ் மக்களை எவ்வாறெல்லாம் பாதித்தன என்பதை விளக்கத் தேவையில்லை.

ஆனால், விடுதலைப்புலிகளின் எழுச்சியின் பின் அந்த நிலைமையில் ஏற்பட்ட வியத்தகு மாற்றம் பேரினவாதிகளுக்கு பெருத்தகிலியை ஏற்படுத்தியதும் உண்மையே.

இந்த நிலையில் தமிழ் - முஸ்லிம் சமூகத்தவரிடையே பாரம்பரியமாக நிலவி வந்த உணர்வுபூர்வமான உறவினை சிதைப்பதை அவர்கள் இலக்காகக் கொண்டு அரசியல் சதித் திட்டங்களை, குறுகிய அரசியல் இலாபநோக்குடன் மேற்கொண்டமை காரணமாக தமிழ்மக்களுக்கும் - முஸ்லிம் மக்களுக்கும் இடையே மட்டுமல்ல தமிழ்மக்கள் தலைமைகள் தமக்குள்ளும், முஸ்லிம் தலைமைகள் தமக்குள்ளேயும் கூட முரண்பட்டும் நிலையுடன் மோதிக்கொள்ளும் நிலையும் ஏற்பட்டன.

இன்று சமாதான சூழலை அல்லது சமாதான முன்னெடுப்புகளை எதிர்நோக்கும் சக்திகள் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே மோதல்களை ஏற்படுத்தும் சதிகளை திட்டமிட்டு மேற்கொண்டு வருவதும் கண்கூடு.

இதில் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான பொ.ஐ. ஐக்கிய முன்னணி வகித்துவரும் பங்கு, மறைமுகமானதும்-பிரதானமானதும் சமாதான முயற்சிகளை முற்றாக அழிக்கும் தன்மையைக் கொண்டதுமாகும்.

அண்மைக்கால கிழக்குமாகாண வன்முறைகள் குறித்த விசாரணைகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு, அதற்கான முதற்காரணம், நிமித்தகாரணம், துணைக்காரணம் என எதுவுமே இனங்காணப்பட்டு நிரூபிக்கப்படாத நிலையில்-கிழக்கில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை புலிகள்தான் மேற்கொள்கிறார்கள் என தகவல் கிடைத்ததாக ஜனாதிபதி தெரிவித்துள்ளமையானது, அவரது குறுகிய, குரூர அரசியல் சிந்தனையையே வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

வெறும் தகவல்களை மட்டுமே வைத்துக்கொண்டு மக்களிடையே பதற்றத்தையும், பீதியையும், இன முரண்பாடுகளையும் உருவாக்கவல்ல கருத்தினை பகிரங்கமாக வெளிப்படுத்துவதானது, எந்தவகையிலும் பொறுப்புள்ள அரசியல் தெளிவுள்ள தொலைநோக்கு சிந்தனை கொண்ட ஒரு நாட்டின் ஜனாதிபதியின் உயர்ந்த பண்பாகாது.

அவர் இப்படியான அறிக்கை ஒன்றை விடமுன்னர், ஒன்றுக்கு பல தடவை சிந்தித்திருக்கவேண்டும். இதனை அவர் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முன் வைத்தே கூறியுள்ளமையானது, அவரது அரசியல் சதித்திட்ட மூலோபாயத்தினை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

இவரது ஆட்சியின் கீழ்தான், இவரது மாமரான முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், அவரது அருமை மகன்களான லொஹான் மற்றும் சானுக்க ஆகியோரும் இணைந்து உடத்தலவின்னவில் முஸ்லிம் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக படுகொலை வேட்டையொன்றை நடத்தியதை இந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்வதும் அவசியமாகும்.


விடுதலைப்புலிகளுக்கும், முஸ்லிம் மக்களுக்குமிடையே கிழக்கில் நல்லுறவுகளை ஏற்படுத்தும் வகையிலான சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இதேவேளையில், அந்த உறவுகளை சிதைக்கும் இலக்குடனே சந்திரிகா இந்த அறிவிப்பை செய்துள்ளார் என்பது தெரிவு.

அது மட்டுமல்லாது கிழக்கில் பாதுகாப்பு படைகளின் பிரசன்னத்தை முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு என்ற பெயரில் அதிகரிப்பு செய்யும் நடவடிக்கைகளை சந்திரிகா மேற்கொண்டிருப்பதும் அங்கு குழப்பத்தை மேலும் ஏற்படுத்தும் மக்களை பீதிக்குள்ளாக்கும் செயற்பாடேயாகும்.

இது கிழக்கில் அமைதியை சிதைக்கும் என்பதும், அங்குள்ள தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் பாதிக்கும் என்பதும் உண்மையே.

பாதுகாப்பு என்ற பெயரில் சந்திரிகா மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளும் சிறிலங்காவில் அமைதிக்கும், சமாதான முயற்சிகளுக்கும் நிரந்தர அச்சுறுத்தலாகவே அமையும் என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்தாகும்.

## நாடும் நடப்பும்




### இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்படும்

# தமிழக மீனவர்களை விடுவிக்க வாஜ்பாய் தலையிடவேண்டும்

### ஜெயலலிதா அவசர கடிதம்

(சென்னை)

இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும், தமிழக மீனவர்களைப் பாதுகாப்பாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா - இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இந்த விடயத்தில் பிரதமர் வாஜ்பாய் தலையிட்டு மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க இராஜதந்திர அணுகுமுறைகள் மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரியுள்ளார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய்க்கு எழுதியுள்ள கடிதத்தில் - இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது மற்றும் கைது செய்யப்படுவது தொடர்பான பிரச்சினைக்கு, அவசரமான-உடனடியான நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்கவேண்டும் எனக் கோரியிருப்பதுடன், அந்தக் கடிதத்தின் பிரதி-வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹாவிற்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த சனிக்கிழமை இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களைக் கைதுசெய்துள்ள இலங்கைக் கடற்படையினர், இவர்களை தடுத்துவைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2000 ஆம் ஆண்டு காணாமல்போன இளைஞரின் வழக்குவிசாரணை வவுனியா நீதிமன்றத்தில் நடந்தது

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆரியதாஸ் விஜயகுமார் என்ற இளைஞர், 2000 ஆம் ஆண்டு வவுனியாவில் 211 ஆவது படைப்பிரிவினால் கைதுசெய்யப்பட்டு, காணாமல் போனமை தொடர்பாக, குறித்த நபரின் தாயார் தொடுத்த வழக்கு நேற்றுமுன்தினம் வவுன்யா மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவரின் தாயாரான ஆரியதாஸ் புவனேஸ்வரி - நீதிமன்றில் தெரிவிக்கையில்,

15-8-2003 ஆம் திகதி அன்று மாலை நான்கு மணியளவில் வெள்ளை வானில் வந்த படையினரால், எனது மகன் கைது செய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டார். இதன்பின்னர், நான் 211 ஆவது படைப்பிரிவிற்குச் சென்று, எங்கே எனது மகன் எனக் கேட்டபோது, தாம் அவரைக் கைது செய்யவில்லையெனத் தெரிவித்தனர். அதன் பின்னரும் நான் பல படைமுகாம்களுக்குச் சென்று தேடியும், எனது மகனைக் காணவில்லை.

எனது மகன் காணாமற்போன சிறிது காலத்திற்குப் பின், களுத்துறை சிறைச்சாலையிலிருந்து விடுதலையான சசிகுமார்-வவுனியாவிலுள்ள 211 ஆவது படைப்பிரிவில் 15.08.2003 அன்று எனது மகனைக் கண்டதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மன்றில் ஆஜரான 211 ஆவது படைப்பிரிவின் தளபதியான கேணல் இரத்நாயக்கவிடம் கேட்டபோது, 27.6.2003 அன்றுதான் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதாகவும், இந்தச் சம்பவம் - 15.08.2003 நடந்ததானால், தன்னால் இது பற்றிய விபரங்களை வழங்கமுடியாதிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனைக் கேட்ட நீதிபதி இளைஞ்செழியன் - கேணல் இரத்நாயக்கவை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டதுடன், சம்பவம் நடைபெற்ற காலத்தில் இருந்த பிரிகேடியருக்கெதிரான விசாரணைகளை நடாத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இதேவேளை, இந்த வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றிலிருந்து, வவுனியா நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### கலாநிதி ராதிகா குமாரசுவாமி தலைமையில்

# மட்டக்களப்பு மாவட்ட நிலைமைகள் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவினர் நேரில் ஆய்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமுகநிலை இன்னமும் திரும்பவில்லையெனவும், பொதுமக்களின் குடியிருப்புக்களில் படையினர் தொடர்ந்தும் குடியிருப்பதோடு, பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் சிங்களத்திலேயே பதியப்படுவதாகவும் தெரிவித்தார் - மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைமை அதிகாரி கலாநிதி ராதிகா குமாரசுவாமி கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த இவர், அங்கு உள்ளூர் பத்திரிகையாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், படையினர் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தற்போதும் தமக்குப் புகார்கள் வருவதாகவும் தெரிவித்தார்.

படையினர் மட்டக்களப்பின் மயிலம்பாவெளி, கொம்மாந்துறை, மொறக்கொட்டாஞ்சேனை, வாழைச்சேனை, வாகனேரி ஆகிய இடங்களின் பிரதான வீதிகளினை மாலை ஆறு மணியுடன் மூடிவிடுவதனால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், வாகனங்கள் மாலை ஆறு மணிக்குப் பின்னர் வேறு பாதைகளூடாகச் செல்வதுடன், மழைகாலங்களில் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக படை அதிகாரிகளைச் சந்தித்தபோது, இந்த வீதிகளை இரவு எட்டு மணிவரை திறப்பதற்குத் தாம் ஆராய்ந்து வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனரெனவும் ராதிகா குமாரசுவாமி தெரிவித்தார்.

அத்துடன், இடம்பெயர்ந்துள்ள மக்கள், தாம் மீளக்குடியமரும்போது சுகாதாரம், புனரமைப்பு மற்றும் பிள்ளைகளின் கல்வி தொடர்பில் மிகப்பாரிய நெருக்கடிகளைச் சந்திப்பதாகவும் தமக்கு முறையிட்டுள்ளனரெனவும் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு சென்ற மனித உரிமை அணைக்குழு தலைமை அதிகாரி கலாநிதி ராதிகா குமாரசாமியுடன், கலாநிதி தீபிகா உடகம, எம்.செல்வகுமரன், சி.சேனநாயக்க, கலாநிதி எ.ஜுனைதீன் ஆகியோரும் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2003

## கணக்கீடு

தொகுப்பு : எஸ்.துஸ்யந்தன்

01. நிவேதா என்ற ஒரு வியாபாரியின் கணக்கேட்டில் இருந்து 31.12.2000 இல் எடுக்கப்பட்ட நிலுவைச் சமன்பாடுகள் பின்வருமாறு.

| பரீட்சை மீதி | வரவு | செலவு |
|---|---|---|
| விபரம் | தொகை | தொகை |
| மூலதனம் | | 173 000 |
| ஆரம்ப இருப்பு | 24 000 | |
| கொள்வனவும் விற்பனையும் | 5 500 | 103 000 |
| உட்திரும்பலும் வெளித்திரும்பலும் | 3 000 | 5 000 |
| சம்பளமும் கூலியும் | 12 500 | |
| வாடகையும் வரியும் | 3 000 | |
| எழுதுகருவிகள் | 450 | |
| தளபாடத்திருத்தச்செலவு | 1 500 | |
| நானாவித வருமானம் | | 2 500 |
| கழிவீடுகள் | 1 200 | 1 500 |
| தரகு | 1 750 | 2 500 |
| மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன்கள் | | 1 000 |
| பொதி கட்டும் செலவு | 2 400 | |
| அறிவிடமுடியாக்கடன் | 600 | |
| வெளிச்சுமைக்கூலி | 1 700 | |
| வங்கிக்கட்டணங்கள் | 1 350 | |
| தருமச் செலவு | 150 | |
| எடுப்பனவுகள் | 5 000 | |
| தளபாடம் | 65 000 | 15 000 |
| காணி கட்டடம் | 100 000 | |
| மோட்டார் வாகனம் | 55 000 | 5 000 |
| கடன்பட்டோரும் கடன் கொடுத்தோரும் | 32 000 | 40 000 |
| வருமதி உண்டியலும் சென்மதி உண்டியலும் | 5 000 | 10 000 |
| வங்கிக்கடன் | | 25 000 |
| வங்கி மேலதிகப்பற்று | | 10 000 |
| வங்கிமீதி | 15 000 | |
| காசுமீதி | 7 900 | |
| | 393 500 | 393 500 |

உமக்கு பின்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்படுகின்றன.

1. 31.12.2000 இல் தொக்கின் பெறுமானம் 1000/-
2. சேர்வுறு வாடகையும் வரியும் 500/-
3. முன்கூட்டியே செலுத்தப்பட்ட சம்பளம் 2500/-
4. பெறவேண்டிய தரகு 500/-
5. நிலையான சொத்துக்களுக்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு
   1) காணி கட்டடம் 10%
   2) தளபாடம், மோட்டார் 5 %
6. வியாபாரக் கடன் பட்டோரில் 10 வீதத்தினை மேலும் அறவிட முடியாக்கடனாக பதிவளிக்குக.

31.12.2000 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்ட ஐந்தொகையைத் தயாரிக்குக.

02. அஜித் என்ற ஒரு வியாபாரி 31.12.99 இல் தயாரித்த பரீட்சை மீதியானது சமப்படவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கில் இடப்பட்டது. பின்னர், பின்வரும் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1) சம்பளம் கொடுத்தது 3000/- காசேட்டில் இடம்பெறவில்லை
2) காப்புறுதிக் கட்டணம் செலுத்தியது 2500/- காசேட்டில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.
3) கொள்வனவுக் கணக்கின் கூட்டுத்தொகை 1500/- இனால் கூட்டி எழுதப்பட்டிருந்தது.
4) உட்திரும்பல் கணக்கின் கூட்டுத்தொகை 1000/- இனால் குறைத்து எழுதப்பட்டிருந்தது.
5) கொடுத்த கழிவு 500/- தவறுதலாகப் பெற்ற கழிவுக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
6) விஜய் என்பவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற 2000/- காசேட்டில் சரியாகப் பதியப்பட்ட போதிலும் விஜய் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
7) சூரியா என்பவருக்கு கடனுக்கு 1000/- இற்குச் செய்த பண்டங்களின் விற்பனை சூரியாவின் கணக்கில் பதியப்படவில்லை.

இவ் வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பையும் தொங்கல் கணக்கையும் தயார்செய்து காட்டுக.

03. a) ஒரு உற்பத்திக் கணக்குக்கும் ஒரு வியாபாரக் கணக்குக்கும் இடையிலான வேறுபாடு யாது.
b) ஒரு உற்பத்தி நிறுவனம் உற்பத்திக் கணக்குகளை தயாரிப்பதன் நோக்கம் யாது?
c) வரையறுக்கப்பட்ட இலங்கைக் கண்ணாடி உற்பத்திக் கம்பனியின் கணக்கேடுகளில் இருந்து 31.12.99 இல் எடுக்கப்பட்ட மீதிகள் பின்வருமாறு -

01.01.99 இல் தொக்குகள்

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் | 22 500/- | |
| முடிவுப் பொருள் | 15 000/- | |
| குறைவேலைப் பொருள் | 7 500/- | |
| கூலி | நேர் 10 000/- | நேரல் 5 000/- |
| செலவீனம் | நேர் 5 000/- | நேரில் 3 000/- |
| உற்பத்தி மீதான தனி உரிமைகள் கட்டணம் | 12 000/- | |
| தொழிற்சாலைச் சம்பளம் | 11 5000/- | |
| மூலப்பொருள் கொள்வனவு | 250 000/- | |
| மூலப் பொருள் வெளித்திருப்பம் | 10 000/- | |
| உட்சுமைக் கூலி | 2 500/- | |
| கப்பல் கூலி | 3 500/- | |
| தொழிற்சாலை வாடகையும் வரியும் | 2 800/- | |
| தொழிற்சாலை காப்புறுதிக்கட்டணம் | 2 000/- | |
| தொழிற்சாலைப் பொறித்தேய்வு | 4 000/- | |

31.12.99 இல் தொக்குகள்

| | |
|---|---|
| மூலப்பொருள் | 8 000/- |
| முடிவுப் பொருள் | 10 000/- |
| குறைவேலைப் பொருள் | 5 000/- |

31.12.99 இல் முடிவுற்ற ஆண்டுக்கான உற்பத்திக் கணக்குகளை தயார் செய்து காட்டுக.

04. மாதவன் என்ற ஒரு வியாபாரி 31.12.2000 இல் தயாரித்த காசேட்டு வங்கி மீதியானது 29 500/- இனைக் காட்டியது. ஆனால் வங்கிக்கூற்று வங்கி மீதியானது வித்தியாசமாதொரு மீதியைக் காட்டியது.

a) வங்கியில் பணமாக்கப்படாத காசோலை 1750/-
b) வங்கியால் பணமாக்கப்படாத காசோலை 2 000/-
c) மாதவன் என்பவரின் வங்கிக்கணக்கின் பெயரில் மாதவி என்பவர் நேரடியான வைப்பிலிட்ட தொகை 2500/-
d) நிலையான கட்டளையின் பெயரில் வங்கி திரட்டிய பங்கு லாபம் 3500/-
e) நிலையான கட்டளையின் பெயரில் வங்கி அறவிட்ட வங்கிக் கூலி 100/- உம் காசோலைப் புத்தகக் கட்டணம் 75/- உம் காசேட்டில் இடம்பெறவில்லை.
f) வங்கியால் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட காசோலை 1250/- ஆகும்.

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினை தயார் செய்து காட்டுக.

# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2003

## சமூகக் கல்வியும் வரலாறும்

தொகுப்பு : பிரபல ஆசிரியர்




1. பொதுநலவாய அமைப்பின் தலைமைத்துவ நாடாக விளங்கும் நாட்டினைக் குறிக்கும் எழுத்து யாது?
   1. A  2. B  3. C  4. D
2. 'சார்க்' அமைப்பின் அலுவலகம் அமைந்துள்ள நாட்டினைக் குறிக்கும் எழுத்து யாது?
   1. A  2. B  3. C  4. D
3. ஆசிய அபிவிருத்தி வங்கி அமைந்துள்ள நாட்டினைக் குறிக்கும் எழுத்து யாது?
   1. A  2. B  3. C  4. D
4. அண்மையில் 'கொலம்பியா' என்ற விண்வெளிக்கலம் வெடித்துச் சிதறியது. அதிலிருந்த ஏழு விஞ்ஞானிகளும் உயிரிழந்தனர். இந்த விண்வெளிக்கலத்திற்குச் சொந்தக்காரரான நாடு எது?
   1. A  2. B  3. C  4. D
5. இலங்கைப் பொருட்களினை விற்பனை செய்யும் முதல்நிலை நாடாக விளங்கும் நாட்டைக்குறிக்கும் எழுத்து யாது?
   1. E  2. F  3. G  4. H





தரப்பட்டுள்ள படத்தைப் பயன்படுத்தி 6 முதல் 20 வரையிலான வினாக்களுக்கு விடைதருக?

6. தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் (A முதல் G வரையிலான) குறிக்கும் நாடுகள் - ஒன்றுசேர்ந்து உருவாக்கிய அமையம் எது?
   1. ஆசியான்.  2. ஒபெக்
   3. சார்க்  4. உலகவங்கி
7. 2003 ஆம் ஆண்டு 12 ஆவது சார்க் உச்சிமாநாடு குறித்த ஒரு எழுத்துள்ள நாட்டில் நடைபெறவிருந்தது தற்பொழுது காலவரையறையின்றி அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டைக் குறிக்கும் எழுத்து யாது?
   1. A  2. C  3. D  4. F
8. நாட்டின் அரசாங்கத்துக்கும் மாவோயிஸ்ட் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை குறித்த எழுத்துள்ள ஒரு நாட்டில் இடம்பெற்றுள்ளது. அந்த நாட்டைக் குறிக்கும் எழுத்து யாது?
   1. G  2. F  3. B  4. D
9. அண்மையில் அல் - கொய்டா என்ற முஸ்லிம் கிளர்ச்சி அமைப்பின் முக்கிய தளமாக விளங்கியநாடு அதனிடமிருந்து மீட்கப்பட்டு அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நேசப்படைகளின் முயற்சியால் அங்கு ஜனநாயகம் மீண்டும் மலர்விக்கப்பட்ட நாட்டை குறிக்கும் எழுத்து யாது?
   I). Y  II). X  III). Z  IV). D
10. இலங்கை முதலாம் விஜயபாகு ஆட்சிக்காலத்தில் வர்த்தகத் தொடர்பு எந்த எழுத்தைக் கொண்ட நாட்டுடன் மேற்கொள்ளப்பட்டது?
   1. Y  2. D  3. M  4. A

**பின்வரும் ஆங்கில எழுத்து குறித்துநிற்கும் நாட்டின் பெயரை அதனருகே எழுதிவிடுக?**

11. M  12. F  13. A  14. D
15. C  16. G  17. E  18. Z
19. B  20. Y

21. உலகிலுள்ள மக்கள் அனைவரும் உச்ச அளவில் சுகநலன்களைப்பேணுதல் என்ற பிரதான நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்பு யாது?
   1. யுனிசெப்  2. உணவு விவசாய ஸ்தாபனம்
   3. யுனெஸ்கோ  4. உலக சுகாதார ஸ்தாபனம்
22. ஐக்கிய நாடுகள் அமையத்தில் இலங்கை அங்கத்துவம் பெற்றுக்கொண்ட ஆண்டு எது?
   1. 1945  2. 1955  3. 1965  4. 1675
23. 'சப்தா' ஒப்பந்தம் எந்த நாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்டது.
   1. ஐரோப்பிய பொதுச்சந்தை  2. சார்க் நாடுகள்
   3. பொதுநலவாய அமைப்பு நாடுகள்  4. ஆசியான்
24. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் கண்டிராச்சியத்துக்கு சட்டபூர்வமான உரித்துடையவனாக உறுதிசெய்யப்பட்டது?
   1. தந்துரே போரில் போர்த்துக்கேயரை தோல்வியடையச் செய்ததன்மூலம்
   2. இளவரசி குசமாசன தேவியை தனது இராணியாக்கிய தன் மூலம்
   3. கண்டிராச்சியத்தில் உள்ளே ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாக முறைமையை ஏற்படுத்தியமை
   4. கண்டி பிரதானிகளுக்கு வெகுமதிகள்வழங்கி அவர்களைத் தனது பக்கத்திற்கு சேர்த்துக்கொண்டமை
25. கண்டிராசதானி அரசமாளிகையின் உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிலம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
   1. கபாடகம்  2. நிந்தகம்
   3. மானிய நிலங்கள்  4. விகாரைக் காணிகள்
26. குளத்து நீரை வயல் நிலங்களுக்குப் பாய்ச்சுவதற்காகப் பயன்படுத்துவது?
   1. குளக்கட்டு  2. கலிங்கற்தொட்டி
   3. சுருங்கை  4. கலிங்கல்
27. ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் விலைமட்டங்களுக்கேற்ப தீர்மானிக்கப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   1. வர்த்தக நிலுவை  2. விலைத்தளம்பல்கள்
   3. வர்த்தக விகிதம்  4. நாணயமாற்று விகிதம்
28. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதந்த ஆண்டு யாது?
   1. கி.பி. 1505  2. கி.பி. 1796
   3. கி.பி. 1658  4. கி.பி. 1621
29. 'இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கிய மன்னன்' என்று மக்களால் அழைக்கப்பட்ட மன்னன் யார்?
   1. முதலாம் விமலதர்ம சூரியன்
   2. இரண்டாம் இராஜசிங்கன்
   3. சிறி விஜய இராஜசிங்கன்
   4. செனரத்
30. சர்வதேச மட்டத்தில் உள அமைதியை உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட ஸ்தாபனம் யாது?
   1. ஐக்கிய நாடுகள் அமையம்  2. யுனிசெவ்
   3. யுனெஸ்கோ  4. உலக சுகாதார ஸ்தாபனம்




**தரப்பட்ட இலங்கைப் படத்தினைப் பயன்படுத்தி, 31 முதல் 35 வரையிலான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

31. '2' என்ற இலக்கம் குறித்து நிற்கும் நதியின் பெயர் என்ன?
   1. கலா ஓயா  2. வளவை கங்கை
   3. மல்வத்து ஓயா  4. கிரிந்தி ஓயா
32. சங்கமித்தையும் குழுவினரும் வந்திறங்கிய 'ஜம்புகோளப் பட்டினம்' என்பதனைக் குறித்து நிற்கும் எழுத்து யாது?
   1. A  2. B  3. E  4. X
33. 'X' என்ற எழுத்து உள்ள பிரதேசத்தின் இயற்கைத் தாவர வலயம் யாது?
   1. மத்தியகோட்டு ஈரவலயக் காடுகள்
   2. உலர்வலயக் காடுகள்
   3. இடைவெப்பவலயக் காடுகள்
   4. மலைநாட்டுக் காடுகள்
34. P-T என்ற நெட்டாங்கு யாது?
   1. $79^0$ கிழக்கு நெட்டாங்கு  2. $80^0$ கிழக்கு நெட்டாங்கு
   3. $81^0$ கிழக்கு நெட்டாங்கு  4. $82^0$ கிழக்கு நெட்டாங்கு
35. இலங்கைப் படத்தில் 'E' என்ற எழுத்து குறிக்கும் கரையோரச் சமவெளியின் இலட்சணம் யாது?
   1. வெலிகம குடா  2. கொட்டியாரக் குடா
   3. கற்பிட்டி முனை  4. கொக்கிளாய் கடநீரேரி

**தரப்பட்டுள்ள உலக நாடுகளின் அபிவிருத்தி மட்டங்கள் பற்றிய தரவுகளைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக?**

| நாடுகள் | நட்டாண்டு சனத்தொகை (மில்லியன்) | தலா வருமானம் (ஐ.அ.டொ.) | பிறப்பு % 1000 க்கு | இறப்பு % 1000 க்கு | சிசுமரண % 1000 க்கு | எழுத்தறிவு % 1000 க்கு | ஆயுள் எதிர்பார்ப்பு (வயது) | குடியடர்த்தி (1 சதுர கி.மீ.க்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 18.8 | 820 | 18 | 6 | 16 | 91 | 72 | 297 |
| B | 46.6 | 12500 | 16 | 6 | 10 | 98 | 72 | 466 |
| C | 73.5 | 4100 | 29 | 6 | 38 | 95 | 67 | 246 |
| D | 57.7 | 6700 | 26 | 4 | 10 | 85 | 71 | 66 |
| E | 3.1 | 30250 | 15 | 5 | 4 | 91 | 77 | 5160 |
| F | 955.2 | 500 | 27 | 9 | 75 | 52 | 62 | 322 |

36. மேலுள்ள அட்டவணையில் இந்தியா இலங்கை நாடுகளின் தரவுகளை ஒழுங்குமுறையில் குறிப்பிடுவது?
   1. F உம் A உம்  2. E உம் F உம்
   3. A உம் B உம்  4. C உம் D உம்
37. சுகாதார மருத்துவ சேவைகள் மிகவும் உயர்மட்டத்தில் காணப்படும் நாடு?
   1. B  2. C  3. E  4. A
38. சனத்தொகை இரட்டிப்பாகும் காலத்தை மிகவும் குறைவாகக் கொண்டுள்ள நாடு எது?
   1. D  2. C  3. A  4. F
39. இயற்கை அதிகரிப்பு வீதம் சமமாகக் காணப்படும் இரு நாடுகளை முறையே அதே ஒழுங்கில் குறிப்பிடுவது?
   1. A உம் C உம்  2. B உம் D உம்
   3. E உம் F உம்  4. B உம் E உம்
40. மேற்கூறிய நாடுகளில் கல்வியறிவு மட்டம் மிகக்குறைந்த அளவில் காணப்படும் நாட்டினை குறிக்கும் எழுத்து யாது?
   1. F  2. E  3. D  4. C

(பகுதி - 1 முற்றும்)

# இந்திய இமாச்சல் பிரதேச பஸ் விபத்தில் 25 பேர் பலி!

இந்தியாவின் வடமாநிலமான இமாச்சல்ப் பிரதேசத்தில் ஏற்பட்ட பஸ் விபத்தொன்றில் 25 பேர்வரை கொல்லப்பட்டுள்ளார்கள்.

மேலும் 30 பேர்வரை காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது.

சிம்லாவிலிருந்து 123 மைல்களுக்கு அப்பால் அமைந்த, 'சம்பா' என்ற பிரதேசத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்தியாவில் நூற்றுக்கணக்கான பஸ் விபத்துக்கள் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்றது. கூடுதலான ஆட்களை ஏற்றுவதும், சரியான பராமரிப்பின்மையுமே, இவ்விபத்துக்களுக்கு காரணமாக அமைகின்றன.

# ஜேர்மனியில் மனிதரை கொன்று உண்டவரின் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது!

ஜேர்மனியின் மத்திய பகுதியான றொட்ரன்பேர்க் என்ற பிரதேசத்தில் மனிதனைக் கொலைசெய்து, தனது உணவாக எடுத்துக் கொண்ட அர்மின் மெல் பெய் என்பவரது குற்றம், நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

கணினித் தொழில் நுட்பவியலாளரான ஆர்மின் மெய் வெபய், கணினி வலையூடாக கொலை செய்துஉண்பதற்கு ஒருவர் தேவை என்ற விளம்பரத்தை தெரிவித்திருந்தார்.

ஆஸ்திரியாவைச் சேர்ந்த மாணவன் ஒருவன் அவ்விளம்பரத்தை கணினி வலையில் அவதானித்த பின், ஜேர்மன் பொலிசாருக்குத் தகவல் தெரிவித்திருந்தான். இதன் பின் பொலிசார் அவரிடம் விசாரணை மேற்கொண்ட போது, மனிதர் ஒருவரைக் கொன்று சில பகுதியை அருந்திய பின் மிகுதி உடற்பாகங்களை குளிர்சாதனப் பெட்டியில் பாதுகாத்து பின் அருந்தியதாகவும் தெரிவித்திருந்தார். இச்சம்பவம் 2001 மார்ச் மாதம் நடைபெற்றதாகவும் விசாரணைகள் பெப்ரவரி மாதத்தில் ஆரம்பமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜெனிவா ஒப்பந்தத்தை தயாரித்தவர்களை சந்திக்கவுள்ளார் அமெரிக்காவின் இராஜாங்க செயலர்

முன்னாள் பாலஸ்தீன, இஸ்ரேல் தலைவர்களினால் உருவாக்கப்பட்ட ஜெனிவா ஒப்பந்தத்தை தயாரிப்பதில் சம்மந்தப்பட்டிருந்த சிலரை, வெள்ளிக்கிழமை சந்திப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார். இராஜாங்க அமைச்சர் கொலின்பவலின் சந்திப்பை இஸ்ரேல் உதவிப்பிரதமர் தவறான அணுகுமுறை என எச்சரித்துள்ளார். மேலும், பாலஸ்தீனத் தலைவர்களிடமிருந்து எதுவித பதிலும் இது தொடர்பாக தெரிவிக்கப்படவில்லை.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவிக்கும் போது, தம்மால் தற்போது தயாரிக்கப்பட்டிருந்த தீர்வுத்திட்டத்திறகான பாதைவரைபினை எந்தவிதத்திலும் பாதிக்கமாட்டாதெனத் தெரிவித்தார். ஜெனிவா ஒப்பந்தம் முன்னாள் பாலஸ்தீன, இஸ்ரேலிய சமரசப் பேச்சாளர்களினால் தமது அரசாங்க பிரதிநிதிகளின் துணையின்றி நடத்தப்பட்டதாகும்.

இந்த ஒப்பந்தத்தில் மேற்குக் கரைப்பகுதியையும், காஸாப் பிரதேசத்தை முழுமையாகவும், ஜெருசலத்தில் ஒரு பகுதியையும் பாலஸ்தீனியர்களுக்கு கொடுப்பதற்கு ஏற்றவாறு வகை செய்யப்பட்டிருந்தது.

# பாரதிய ஜனதாக் கட்சி உறுப்பினர்களை பொதுத்தேர்தலுக்கு தயாராக அழைப்பு!

## பிரதமர் வாஜ்பாய் விடுத்தார்



இந்தியாவில் தற்போது ஆட்சியில் உள்ள பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், தமது கட்சி அங்கத்தவர்களை அடுத்த ஆண்டு பொதுத்தேர்தலுக்குத் தயாராகுமாறு, கேட்டுள்ளார். திங்கள் நடைபெற்ற நான்கு மாநிலங்களுக்கான தேர்தல்களில் அவரது கட்சி கூடுதலான வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், டெல்லி, சகரிஷ்கார் ஆகிய மாநிலங்களில் குறிப்பிடத்தக்க அளவில் வெற்றியடையத் தவறினால், பொதுத் தேர்தலை திட்டமிட்ட காலத்திற்கு முன்பே நடத்துமாறு நிர்ப்பந்திக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக நோக்கு

# ஊடகத்துறைக்கெதிரான வன்முறைகள் பாகிஸ்தானில் அதிகரித்துவருகின்றதாம்!

## அமெரிக்க மனிதஉரிமை அமைப்பு குற்றச்சாட்டு



பாகிஸ்தானில் ஊடகத்துறையாளர்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாக, அமெரிக்காவைச்சேர்ந்த மனிதஉரிமை அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்-தற்போதைய ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் பதவியேற்றபின், மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளதாக அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

சரியான காரணங்கள் எதுவுமில்லாது - ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமிர் மிர் எனப்படும் ஊடகத்துறையைச் சேர்ந்தவர் கெரால்ட் எனப்படும் மாதாந்த சஞ்சிகையின் உதவி ஆசிரியராக பணிபுரிந்துவந்துள்ளார்.

அண்மையில் பத்திரிகை ஆசிரியர்களுக்கான விருந்துபசாரமொன்றில் அதிபர் 'முஷாரப்' அவ்வுதவி ஆசிரியரை வன்மையாகக் கண்டித்திருந்தார். இரு நாட்களின் பின் அவரது வீட்டின் முன் அவரின் வண்டி வலதுசாரி அமைப்பினரால் தீக்கிரையாக்கப்பட்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# குழந்தை மருத்துவ அபிவிருத்தி தொடர்பாக பணிப்பாளர்கள் வன்னியில் கூடி ஆராய்வு

## கிளிநொச்சி யுனிசெவ் காரியாலயத்தில் நடைபெற்றது

கிளிநொச்சி யுனிசெவ் காரியாலயத்தில் வட- கிழக்கு அவசர மகப்பேற்று குழந்தை மருத்துவ அபிவிருத்தி தொடர்பாக நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சுகாதார அமைச்சின் வட - கிழக்கிற்கான இணைப்பாளர் ஜெகநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்கள், தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் யுனிசெவ் நிறுவனப் பிரதிநிதிகள் முதலானோர் கலந்துகொண்டனர்.

இத்திட்டத்திற்கான தேவைகள் இனங்காணப்பட்டது பற்றி தமக்கு எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை என, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர்களினால் கூறப்பட்டது. இத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட வட - கிழக்குப் பகுதிகளைவிடச் சிங்களப் பகுதிகளுக்கே கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது சம்பந்தமாக சமாதான காலத்திலும் எமது பகுதிகளில் அதிக தேவைகள் இருப்பதை அறிந்துகொண்டும் மகப்பேற்று வசதிகள் இல்லாததைத் தெரிந்துகொண்டும் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் வாழும் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதையிட்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பிரதிப்பணிப்பாளர்கள் ஆகியோர் தமது கவலையைத் தெரிவித்தனர்.

இனி வரும்காலத்தில் எம்முடன் சம்பந்தப்பட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுடனும் கலந்தாலோசித்து, தேவைகள் இனங்காணப்பட்டு, திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அதற்கமைவாக நிதி ஒதுக்கீடுகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் வலியுறுத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்டப் பொதுமருத்துவமனை அமைப்பதற்கான மூலத்திட்ட உபாய வரைபுடன் வந்த பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், மற்றும் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் முல்லைத்தீவு சென்று மருத்துவமனை அமைக்கப்படவுள்ள இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட வைத்திய அதிகாரி, தமிழீழ சுகாதார சேவையினர் வடக்குக் கிழக்கிற்கான சுகாதார சேவைகள் இணைப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் கட்டிடத் திணைக்களத்தின் பொறியியலாளர்களுடன், கலந்துரையாடினர். இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் துரித நடவடிக்கையெடுக்கப்படுமென மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நாற்சந்தி

கிழக்கில் வன்முறைகளைத் தடுக்க முப்படைகளும் தயார் நிலையிலிருப்பதாக முப்படைத் தளபதிகள் அறிவித்துள்ளார்களாமே!

"அதுக்கு முதல்லை இதைப்படிச்சியே... கிழக்கில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை புலிகள்தான் மேற்கொள்கின்றனர் என சந்திரிகாவுக்கு தகவல் கிடைச்சிருக்காம்...

'இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் சிறிலங்கா அரசின் அரசியல் உள்நோக்கம் தெரிகிறதெல்லே...

"ஓமோம் முப்படைகளையும் தயார்நிலையில் வைத்திருக்கச் சொல்லி விட்டு, புலிகள்மீது குற்றம் சுமத்துவதைப் பார்த்தால் சந்திரிகா சண்டை ஒன்றை மீள ஆரம்பித்து சமாதான முயற்சிகளை தவிடு பொடியாக்க திட்ட மிடுகிறார் என்பது தெரிகிறதுதான்

'ஏன் அம்மணிக்கு இந்த வேலை...?

இதுதான் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போன்ற, நாட்டை குழப்பி அரசியல் ஆதாயம் தேடும் வேலை...

"சண்டையை எப்படியாவது துவக்கி விட்டாப்போதும்... அதுக்கு புலிகளை சீண்டி விடவேண்டும்...பிறகு புலிகள் மீது குற்றத்தைச் சுமத்தி விட்டு, சர்வதேச சமூகத்திடம் புலிகளே சண்டையை ஆரம்பித்தனர் என பிர சாரம் செய்துவிட்டு போரைத் தொடங்கினால்... சமாதானத்தை நிறுத்தி விடலாம், ரணிலை ஓரம்கட்டிவிடலாம், தேர்தல் வராது நிறுத்தி விடலாம், நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி எல்லாவற்றையும் மறைத்துவிடலாம்... என்று தான் சந்திரிகா நினைக்கிறார் போலும்...

'இது தான் இயலாதவன் பொல்லாப்பு சொல்லுற வேலை ஏன்...

'இப்ப அம்மணி முஸ்லிம் மக்களை ஆயுதமாகப் பயன்படுத்தி, சமாதானத்தைக் குழப்பப்போகிறார் என்று சொல்லு...

'அதுமட்டுமில்ல கடைசியில அவதந்திரம் தனக்கந்தரம் என்ற நிலையும் அவருக்கு ஏற்படப் போகிறது என்றும் சொல்லுறன்...!'

-தெருவாசி

## ஜெயவர்த்தனபுர பல்கலையில்

# துணைவேந்தருக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம்!

(கொழும்பு)

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் கலாநிதி டி.எஸ் எபிடவத்தவை பதவி நீக்கம் செய்யுமாறு கோரி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் - சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்திருக்கிறது.

பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான கலாநிதி என்.எஸ். அமரதாஸ நேற்றுமுன்தினம் மாலை துணைவேந்தரைப் பதவிநீக்க வேண்டுமெனக்கோரி, சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். இவருக்கு ஆதரவாக இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் சில மாணவர்களும் இணைத்துள்ளனர்.

இதனையடுத்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ளவர்களுக்கு பாதுகாப்பு வழங்கவுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.பி.டி பத்திரன தெரிவிததார்.

# கிண்ணியா நிலைமை...

மோதல் சம்பவங்கள் தொடர்பாகவும், விடுதலைப்புலிகளும் படைத்தரப்பும் இது தொடர்பாக எடுக்க வேண்டிய வழிமுறைகள் பற்றியும் ஆராயப்பட்டதாகத் தெரிவித்தார்.

அத்துடன் இது போன்ற அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறா வண்ணம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுப்பகல் ஒருமணியளவில் திருகோணமலை மடத்தடி என்னும் இடத்தைச் சுற்றி வளைத்த படையினர் அங்குள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த டி.எஸ்.பி வீரசிங்க என்பவரின் வீட்டிலிருந்து இரண்டு கிரனைட்டுக்களை மீட்டதோடு அவரையும் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் நேற்று இரவு எட்டு மணியிலிருந்து இன்று காலை ஆறு மணிவரை மூதூர்ப்பிரதேசம் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

(04,10)

# 73 தமிழக மீனவர்கள் கடற்படையால் கைது!

## 15 மீன்பிடி படகுகளும் பிடிபட்டன

ஊர்காவற்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்த அறுபத்துமூன்று இந்திய மீனவர்களைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா இதுகுறித்துத் தகவல் வெளியிடுகையில் -

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்த 63 இந்திய மீனவர்கள் 13 இழுவைப் படகுகள் சகிதம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து மீன்பிடி வலைகள், வெற்று டீசல் கொள்கலன்கள், டீசல், ஒலிபெருக்கியுடன் கூடிய கசற் றெக்கோடர், மண்ணெண்ணை அடுப்புகள் மற்றும் 937 கிலோ மீன்கள் என்பனவற்றைக் கடற்படையினர் கைப்பற்றினர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இலங்கை கடற்படையால 73 தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக, தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 47 தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்ட சிறிது நேரத்தில், ஜெகதாப்பட்டினத்திலிருந்து மீன்பிடிக்கச்சென்ற 26 மீனவர்கள் கடற்படையால் கைதுசெய்யப்பட்டனர்.

முதலாவது சந்தர்ப்பத்தில் எட்டு மீன்பிடிப் படகுகளும், இரண்டாவது சந்தர்ப்பத்தில் ஏழு மீன்பிடிப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன.

பாரம்பரியமாக மீன்பிடிக்கும் பிரதேசத்தில் அங்கீகாரம் பெற்று 535 மீன்பிடிப் படகுகள் இராமேஸ்வரத்திலிருந்து சென்று தொழிலில் ஈடுபட்டதாகவும், நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் இவர்களில் 47 பேரை இலங்கை கடற்படையினர் எந்த எச்சரிக்கையுமின்றி கைதுசெய்ததாகவும் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் குறித்து தமிழகத்தைச் சேர்ந்த மீனவர் சங்கங்கள்- இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மற்றும் சென்னையிலும், புதுடில்லியிலுமுள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவற்றுக்கு அவசர பக்ஸ் கடிதத்தை அனுப்பியுள்ளதுடன், உடனடியாக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

இதேவேளை, ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்ட இவர்களில் படகோட்டிகளான 11 பேர் மட்டும் ஊர்காவற்துறை நீதிமன்றில் நேற்று ஆஜர்செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களை நாளைவரை யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைப்பதற்கான உத்தரவை ஊர்காவற்துறை நீதிவான் அ.பிறேம்சங்கர் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை இவர்கள் செலுத்தி வந்த மீன்பிடி இழுவைப் படகுகள் மற்றும் உபகரணங்கள் காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன். இப்படகுகளில் வந்திருந்த எஞ்சிய மீனவர்கள் அனைவரையும் நீதிமன்று விடுவித்துள்ளது. இவர்களை விடுவிக்க ஏதுவாக இந்தியக் கடற்படையிடம் கையளிக்கவென காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் தற்போது தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# ரஷ்ய பாதுகாப்பு...

55 ஆவது டிவிசன்களின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் மற்றும், உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளுக்கும், விஜயம்செய்து பாதுகாப்பு நிலைவரங்களை மதிப்பீடு செய்தனர். அத்துடன் இந்தப் பகுதிகளில் உள்ள இராணுவ உயர் அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தினர்.

பலாலி படைத்தலைமை அலுவலகத்தில் யாழ். குடாநாட்டுப் படைகளின் கட்டளை அதிகாரி - மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, பிரதிக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி ஆகியோரையும் ரஷ்யப் பாதுகாப்பு அதிகாரிகள், கடந்த 26 ஆம் திகதி சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். மறுநாள் இவர்கள் விமானம் மூலம் கொழும்பு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யப்பாதுகாப்பு அதிகாரிகளின் குடாநாட்டுக்கான விஜயம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்ததுடன், மூன்று நாட்களைக் கொண்ட இந்த விஜயத்தில் குடாநாட்டில் உள்ள இராணுவ நிலைகள் குறித்த மதிப்பீடுகளைச் செய்வதே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்ததாகவும் தெரியவருகினறது.

# தனிப்பட்ட ரீதியில்...

மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - வீசப்பட்ட கைக்குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் அப்பகுதியிலுள்ள 524 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த படையினரின் உதவியுடன் வெடிக்க வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், சம்பவம் நடந்த இடத்தில் கைகலப்பு மட்டுமே இடம் பெற்றுள்ளதுடன், துப்பாக்கிச் சன்னங்களும் சிதறிக்காணப்படுவதாக நேற்று அவ்விடத்திற்கு விசாரணைக்காக வந்த நெல்லியடிப்பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், குண்டுவெடிப்புச் சம்பவம் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை எனத் தெரிவித்த அவர்கள் இச்சம்பவத்தில் எவரும் காயமடைந்திருக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக மேலதிக விசாரணையை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(202)

நீங்கள் விண்ணப்பித்து விட்டீர்களா? இறுதிச் சந்தர்ப்பம் !!!

IIS IIS IIS IIS IIS IIS IIS IIS IIS IIS



போட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாகச் செயற்படும் மாணவர் ஒருவருக்கு புத்தம்புதிய கணனி (PIV) ஒன்று பரிசளிக்கப்படும்.

கணனிக் கல்விக்கான புலமைப் பரிசில்திட்டம் -2004

விண்ணப்பமுடிவுத் திகதி : 15/12/2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
மேலும் எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது.

எமது புலமைப்பரிசில் திட்டத்தின் :

தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்படும் திகதி : 16.12.2003
தெரிவுப் பரீட்சை நடைபெறும் திகதி : 21.12.2003
தெரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியாகும் திகதி : 24.11.2003
கல்வியாண்டு 2004/2005 இல் கற்கைநெறிகள் ஆரம்பமாகும் காலப்பகுதிகள் : ஜனவரி, மார்ச், மே, ஜூன், ஆகஸ்ட், செப்ரெம்பர், நவம்பர்

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
IIS, # 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1569 திகதி: 02.12.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| B | 2 | 0 | 2 | 6 | 2 | 8 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.